www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

# கண்ணோட்டம்

கண்ணோட்டம் KANNODDAM

வெளியீடு – 61 ஜூலை – ஆகஸ்ட் 2011 விலை : 10.00

# யாழ்ப்பாணத்துக்கு பாராளுமன்ற உறுப்பினர்கள் குறைப்பு - தமிழர்கள் கவலை

யாழ்ப்பாண மாவட்டத்தின் வாக்காளர் இடாப்பில் இருந்து சுமார் மூன்று இலட்சம் பேரின் பெயர்கள் நீக்கப் பட்டதால் யாழ் மாவட்டத்திலிருந்து ஆறு பாராளுமன்ற உறுப்பினர்களே தெரிவு செய்யப்படுவார்கள் என தேர்தல் ஆணையகம் அறிவித்துள்ளது.

இது என்ன நியாயம் நீதியின் அடிப் படையிலென தமிழ்த் தலைவர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

❖ யாழ்ப்பாணத்தில் இன்னமும் முழுமையான சனத்தொகை கணக் கெடுப்பு நடைபெறவில்லை.

❖ பெருந்தொகையான யாழ்ப்பாண வாக்காளர்கள் இன்னமும் வாக்காளர் இடாப்புக்களில் பதியப்படவில்லை.

❖ அகதிகளாகி வெவ்வேறு இடங் களுக்குச் சென்ற மக்கள் இன்னமும் முழுமையாக மீளக் குடியேறவில்லை.

இந்த நிலையில் தேர்தல் ஆணைய கத்தின் இந்த அறிவிப்பு தமிழ் மக்கள் மத்தியில் பெரும் மனக்குழப்பத்தையே ஏற்படுத்தியுள்ளது.

## பிரதேச செயலகங்களையும் உள்ளூராட்சி சபைகளையும் உருவாக்க தமிழ் அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்

**–இரா. துரைரட்ணம்**



மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள கிரான் பிரதேச செயலகத்திற்குட்பட்ட பகுதிகளுக்கு உள்ளூராட்சி சபையை உருவாக்குதல் தொடர்பாகவும், அம்பாறை மாவட்டத்திலுள்ள கல் முனை தமிழ் பிரிவு உப பிரதேச செய லகத்தை முழு அதிகாரமுள்ள பிரதேச செயலகமாகவும் அதற்கான உள்ளு ராட்சி சபையையும் உருவாக்குதல் தொடர்பாகவும் பல காலமாக பல முயற்சிகள் மேற்கொண்டும் இதுவரை பயனளிக்கவில்லை. இவ்வாறான நிலையில் அரசுடன் சேர்ந்த தமிழ் அமைச்சர்கள் அபிவிருத்தியோடு எமது உரிமைகளையும் கருத்திற்கொண்டு செயல்பட வேண்டும். தமிழர்களை பெரும்பான்மையாகக் கொண்ட பிரதேச செயலகங்களையும், உள்ளூராட்சி சபைகளையும் உருவாக்க தமிழ் அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென மீள்குடியேற்ற பிரதி யமைச்சருக்கு பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவரும் கிழக்கு மாகாணசபை உறுப்பினருமான இரா. துரைரெட்ணம் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

மேலும் அக்கடிதத்தில் நீண்டகாலமாக பாரம்பரிய தமிழர் பகுதிகள் திட்டமிட்டு அபகரிக்கப்படுவதனையும் தமிழர்களின் வணக்கஸ்தலங்கள் திட்மிட்டு அழிக்கப்பட்டு வந்துள்ளமையையும் சுட்டிக்காட்டியுள்ளார்.

1989ம் ஆண்டு கல்முனை தமிழ் உப பிரதேச செயலகம் உருவாக்கப்பட்டு 23 வருடங்களாகியும் இன்றுவரை காணி, நிதி மற்றும் ஏனைய அதிகாரங்கள் வழங்கப்படாமலேயே செயல்படுகின்றது.

(தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க)

## அரசுடனான பேச்சுவார்த்தை தொடர்பாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அறிவித்துள்ள நிலைப்பாட்டை வரவேற்கிறோம்

தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் கடந்த ஆறு மாதங்களிற்கு மேலாக பத்து சந்திப்புகளை அரசுடன் மேற் கொண்டனர். இப்போது தொடர்ந்தும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவதானால் அரசாங்கம் இரண்டு வாரத்துக்குள் ஓர் அரசியற் தீர்வுத் திட்டத்தை முன்வைக்க வேண்டுமென நிபந்தனை விதித்திருப் பதை பத்மநாபா ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி வரவேற்கிறது.

தமிழ் மக்கள் மத்தியில் பலத்த எதிர்பார்ப்புக்களை ஏற்படுத்திவிட்டு, ஆனால் உருப்படியாக எந்தப் பெறுபேற்றையும் எய்தாமல் மர்மத் தொடர்கதையாக இருந்து கொண்டிருந்த

(தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க)

## இடதுசாரி தலைவர்கள் தமிழ்த் தலைவர்கள் சந்திப்பு








இலங்கை அரசில் சிரேஷ்ட அமைச்சர்களாக அங்கம் வகிக்கும் இடதுசாரிக் கட்சிகளின் தலைவர் களான தோழர் டியூ குணசேகர (இலங்கை கம்யூனிஸ்ட் கட்சி) பேராசிரியர் திஸ்ஸ விதாரண (சமசமாஜ கட்சி) மற்றும் தோழர் வாசு தேவ நாணயக்கார (ஜனநாயக இடது சாரி முன்னணி ) ஆகியோருக் கும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி யின் தலைவர் திரு. ஆனந்தசங்கரி, முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சரும் பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் சிரேஷ்ட தலைவரு மான திரு வரதராஜப்பெருமாள் மற்றும் தமிழீழ மக்கள் விடுதலை கழகத் (புளொட்) தலைவர் திரு. சித் தார்த்தன் ஆகி யோருக்கும் இடையில் சந்திப் பொன்று 07.08.2011 ஞாயிற்றுக் கிழமை பேராசிரியர் திஸ்ஸ விதாரண அவர்களின் இல்லத்தில் இடம்பெற்றது.

இச் சந்திப்பின்போது ஜனாதிபதியின் பிரேரணையின் பேரில் உருவாக்கப படவுள்ள பாராளுமன்றத் தெரிவுக்குழு தொடர்பாகவும், பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலை வர்களுக்கிடையில் இடம்பெறவுள்ள கூட்டம் தொடர்பாகவும், இந்த விடயத் தில் இந்த மூன்று அமைச்சர்களும் எடுக்க வேண்டிய நிலைப்பாடுகள் தொடர்பாகவுமே கலந்துரையாடப் பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இக்கலந்துரையாடலின்படி, பாராளு மன்றத் தெரிவுக்குழுவானது திட்ட வட்டமாக ஆறு மாத காலத்துக் குள்ளாகவோ அல்லது குறிப்பாக குறித்துரைக்கப்பட்ட சில மாதங் களுக்குள்ளாகவோ ஓர் அரசியல் தீர்வுக்கான திட்டத்தை ஜனாதிபதிக்கு பாராளுமன்ற சபாநாயகர் ஊடாக சமர்ப்பிக்கும் வகையில் பரிந்துரைக்க வேண்டும் எனவும் அத்துடன் பாராளுமன்ற தெரிவுக்குழுவில்

(தொடர்ச்சி 7ம் பக்கம் பார்க்க)

மத்திய அரசாங்கத்தின் சரிபாதி அதிகாரங்கள் தமிழருக்கு

பக்கம்- 02

மலையகத் தொழிலாளர்களை கூறுபோட்டு அரசியல் நடத்தும்

பக்கம்- 03

அன்பார்ந்த நண்பர்களே! ஆற்றல்மிகு தோழர்களே!

பக்கம்- 05


பக்கம்- 06

தமிழ்த் தலைவர்கள் புதுடெல்லிக்கு அழைப்பு

பக்கம்- 08

படிப்பகம்

www.padippakam.com



# கண்ணோட்டம்

Kannoddam



## நோயும் நோய்க்கு மருந்தும்

நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் தமிழ் மக்களின் பிரதிபலிப்புக்கள் எமது தீவிர கரிசனைக்குரியவை.

யுத்தம் முடிவடைந்து இரண்டு வருடங்களின் பின்னர் நடைபெற்ற தேர்தலில் தமிழ் மக்கள் தீர்மானகரமாக சில விடயங்களை உலகுக்கு எடுத்தியம்பி உள்ளார்கள்.

மக்கள் முட்கம்பி வேலி முகாம்களில் வாழ்ந்த நாட்களில் நடத்தப்பட்ட வவுனியா நகரசபை தேர்தலிலும் சரி, அதற்குப் பின்னர் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல், பாராளுமன்றத் தேர்தல் ஆகியவற்றில் மக்களின் நம்பிக்கையீனங்கள் ஓரளவே வெளிப்பட்டன. ஆனால் நடந்து முடிந்த உள்ளூராட்சி தேர்தலில் அது தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது.

யுத்தத்துக்கு பின்னர் அமைதி தோன்றும் சமாதானம் மலரும் சமத்துவமான வாழ்வு கிட்டும் என்று நினைத்த மக்களுக்கு அந்த நம்பிக்கைகள் கொஞ்சம் கொஞ்சமாக அற்றுப் போயின என்பதையே தேர்தல் முடிவுகள் காட்டுகின்றன.

இராணுவமயப்பட்ட சூழ்நிலை பௌத்த சிங்கள மேலான்மையை சகல வழிகளிலும் தமிழ் மக்கள் மீது திணிக்கும் நடவடிக்கைகள், இப்போது நிலமும் வாழ்வும் பறிபோய்விடுமோ என்ற அச்சம் அதிகரித்து வந்ததை நியாய உணர்வு கொண்ட எவரும் மறுத்துவிட முடியாது.

**கால ஓட்டம் பற்றி ஆசிரியரின் கண்ணோட்டம்**

முட்கம்பி வேலிகளுக்குப் பின்னால் வாழ்ந்த மக்களில் 90 வீதம் மீளக்குடியேற்றப்பட்டு விட்டார்கள்.

தடுப்பு முகாம்களில் இருந்து இளைஞர் யுவதிகள் படிப்படியாக விடுவிக்கப்படுகிறார்கள்.

ரோட்டுக்கள், பாலங்கள் போடப்படுகின்றன. உயர்பாதுகாப்பு வலயங்கள் படிப்படியாக அகற்றப்படுகின்றன.

இந்த அபிவிருத்தி விடயங்கள் அவசியமற்றவை என்று தமிழ் மக்கள் கருதவில்லை. ஆனால் தமது அடிப்படையான அரசியற் கோரிக்கைகள், மற்றும் சமூக பொருளாதாரப் பாதுகாப்பான விடயங்களுக்கான வேலைத்திட்டங்கள் என தமிழ் மக்கள் கருதவில்லை என்பது போல் தேர்தல் முடிவுகளால் தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ளது. தமது அரசியல் அபிலாஷைகள் தொடர்பான உரிமைகள் அங்கீகரிக்கப்படாத நிலையில் அபிவிருத்தி நடவடிக்கைகளையும் சொற்ப சலுகைகள் வழங்கும் நடவடிக்கைகளையும் மிகவும் எச்சரிக்கை உணர்வுடனேயே பார்க்கின்றனர்.

அன்றாட வாழ்வில் நாளாந்தம் இராணுவ பிரசன்னம் என்பது மக்களுக்கு அசௌகரியமான ஒன்றாகவே அமைந்திருந்தது.

ஏ-9 பாதை திறக்கப்பட்டு மக்கள் கணிசமான அளவு சுதந்திரமாக பயணிக்கக்கூடிய நிலை 30 வருடங்களுக்குப் பின்னர் ஏற்படுத்தப்பட்டு இருந்தாலும் அவையெல்லாம் மக்களிடம் அவர்களது அரசியல் பொருளாதார சுதந்திரங்கள் மீதான எதிர்பார்க்கைகளில் எந்த தளர்வையும் ஏற்படுத்தவில்லை.

அரசியல் உரிமைகள் மாத்திரமல்ல தமது மத, கலாச்சார உரிமைகளுக்கும் பொல்லாப்பு வைக்கப்படுகிறது என்று தமிழர்கள் நம்பும் அளவுக்கு கண் எதிரிலேயே காரியங்கள் நடைபெறுகின்றன..

யுத்தத்தின் வெற்றியானது புலிகளுக்கு எதிரான யுத்தத்தில் அடைந்த வெற்றி மட்டுமே என அரசு தெளிவாக வெளிப்படுத்தியிருந்தால் கணிசமான தமிழ் மக்களும் அதனை தமது வெற்றியாகவும் கொண்டிருப்பர். ஆனால் இங்கு அந்த வெற்றியானது அரசினால் தமிழ் மக்களின் அரசியல் உரிமைகளுக்கான போராட்டத்தின் மீதான வெற்றியாகக் கொண்டாடப்படுவதாக தமிழ் மக்கள் சந்தேகப் படுவதனாலேயே தமிழ் மக்களால் அந்த யுத்த வெற்றிக் கொண்டாட்டங்களை ஜீரணிக்க முடியாமல் இருக்கிறது.

இந்த இடத்தில் அபிவிருத்தி என்பதை அரசியல் கலாச்சார உரிமைகள் மீதான எதிர்பார்க்கைகள் மேவி நிற்கின்றன என்பதைக் காணலாம். எல்லாவற்றையும் விட அரசியல் உரிமைகளும் அடிப்படைச் சுதந்திரங்களும் இங்கு மேலானவைகளாக உணரப்படுகின்றன.

இந்தநிலையில் தமிழ் மக்களுக்கு மாற்றுத் தெரிவுகள் இல்லையென்ற நிலை ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.

யுத்தம் முடிவடைந்த பின்னர் தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன, ஏற்பட்ட மனக்காயங்கள் ஆற்றப்படும், இங்கு சமூகங்களுக்கிடையில் சமத்துவமான வாழ்வு நிலைநாட்டப்படும் என்பனவற்றிற்கான சமிக்ஞைகள் அரசிடமிருந்து திட்டவட்டமாக வரவில்லை என்பதையே இன்றைய நிலைமைகள் காட்டுகின்றன..

யுத்தகள வெற்றியில் ஏற்பட்ட பெருமிதத்தின் கூற்றாக "ஒரே நாடு, ஒரே மக்கள்", "சிறுபான்மை பெரும்பான்மை என்று எதுவும் இல்லை", இங்கு சிங்களவர்கள், தமிழர்கள், முஸ்லிம்கள் என்று எதுவுமில்லை", "எல்லோரும் இங்கு எல்லா இடங்களிலும் கலந்து வாழப் பழக வேண்டும்" என்றவாறு அரசு தரப்பிலிருந்து எழும் குரல்களை சிங்களப் பெரும்பான்மையின் மேலாதிக்கவாத எக்காளங்களாகவே தமிழ் மக்கள் பார்க்கின்றார்கள். .

வடக்கு கிழக்கின் சிவில் நிர்வாகத்திலும் மக்களின் அன்றாட வாழ்விலும், சமூகத்தின் எல்லா நிறுவனங்களினதும் செயற்பாடுகளில் படையினரின் தலையீடு எரிச்சலூட்டும் அளவிற்கு அதிகரித்திருப்பதாகவே அபிப்பிராயங்கள் உள்ளன.

இது வடக்கு கிழக்கில் ஒரு பீதி நிலையை பதற்ற நிலையை யுத்தத்தின் பின்னரும் தக்க வைத்திருக்கிறது..

யுத்தத்தின் பின்னரும் வன்முறை கலந்த ஒரு அராஜக சூழல் நிலவுவதாகவே மக்கள் அஞ்சுகிறார்கள்.

உலகில் எந்த மக்கள் பிரிவினரும், சமூகக் கூட்டமும் சுதந்திரமற்ற கீழ்ப்படிவான வாழ்வை மனமுவந்து ஏற்றுக்கொள்ளாது என்பது சாதாரணமான அறிவாகும்..

அத்தகைய நிலை ஏற்பட்டிருப்பதாக உணரப்படும் போது கோபமும் விரக்தியுமே ஏற்படுகிறது.

திரும்பத் திரும்ப ஒரேவிதமான அல்லது வெவ்வேறு விதமான அடக்குமுறைகள் ஏற்படும் போது அங்கு அதற்கெதிரான கோபாவேசமும் அதிலிருந்த விடுபடுவதற்கான சுதந்திர வேட்கையும் ஏற்படுவது இயல்பே.

இந்த வரலாற்று இயக்கத்தை புரிந்துகொள்வதில்தான் நாட்டின் எதிர்காலம் சிறப்பாக அமைய முடியும்.

இலங்கையின் ஆட்சி முறையில் தமிழ் மக்கள் நியாயமான அளவுக்கு பங்காளர்களாக ஆக்கப்பட்டு சமூக சம நீதி, சமத்துவம் அகியவற்றின் அடிப்படையில. அமைந்த சமூகங்களுக்கு இடையிலான சகோதரத்துவம், ஒருவரை ஒருவர் புரிந்து கொண்ட ஐக்கியமான வாழ்வு கட்டியெழுப்பப்படாத வரை இந்த நாட்டில் நிலவும் விஷச் சூழல் தொடர்ந்து இருந்துகொண்டேதான் இருக்கும்.

வடக்கு கிழக்கில் உள்ளூராட்சி தேர்தல் முடிவுகளில் மக்கள் நோய் எது என்பதை அடையாளம் காட்டியுள்ளார்கள். மக்களால் தெரிவு செய்யப்பட்டவர்கள் நோய் நீக்குபவர்களாக செயற்படுவார்களா என்பதை காலம்தான் எதிர்வு கூற வேண்டும்.

## மத்திய அரசாங்கத்தின் சரிபாதி அதிகாரங்களை தமிழருக்கு வழங்க வேண்டும் – திஸ்ஸ விதாரண

மத்திய அரசாங்கத்தின் சரிபாதி அதிகாரங்கள் தமிழ் மக்களுக்கும் வழங்கப்பட வேண்டும். இலங்கை வாழ் தமிழர்களின் நியாயபூர்வமான அரசியல் கோரிக்கைகளுக்கு மதிப்பளித்து, கூடிய அதிகாரப் பகிர்வை மேற்கொண்டு தேசிய இனப்பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டியது அவசியமாகும் என்று அமைச்சரும், சர்வகட்சி குழுக்களின் தலைவருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண வலியுறுத்தியுள்ளார். நல்லாட்சியையும் அரசியல் தீர்வையும் உறுதிப்படுத்தாமல் இலங்கையால் ஒருபோதும் பொருளாதார அபிவிருத்தி இலக்குகளை அடைய முடியாது. எனவே தேசிய இலக்குகளில் சிறுபான்மை இன மக்கள் உள்வாங்கப்பட வேண்டுமாயின் அவர்களின் சுய கௌரவம் மற்றும் மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்பட வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளார்.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றியீட்டிய லங்கா சமசமாஜக் கட்சியின் வேட்பாளர்கள் விஞ்ஞான அலுவல்கள் அமைச்சில் அமைச்சரும் பேராசிரியர் திஸ்ஸ விதாரண முன்னிலையில் சத்தியப்பிரமாணம் செய்து கொண்ட போது அமைச்சர் மேற்குறிப்பிட்டவாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் இது வரையில் நடைபெற்ற உள்ளூராட்சிச்சபைத் தேர்தலில் 42 பேர் லங்கா சமசமாஜக் கட்சியின் சார்பில் போட்டியிட்டு வெற்றியீட்டியுள்ளனர். எவ்விதமான அதிகாரங்களையும், தேசிய வளங்களையும் மோசடி செய்யாது நேர்மையாக செயற்பட்டு மக்களின் ஆதரவை எமது கட்சி உறுப்பினர்கள் பெற்றுக் கொண்டமை வரவேற்கத்த விடயமாகும்.

இன்று இலங்கையில் உள்ள அரசியல் கட்சிகளில் மிகவும் பழைமை வாய்ந்தது லங்கா சமசமாஜக் கட்சியாகும். பிரிட்டன் ஆக்கிரமிப்பில் இலங்கை இருந்தபோது இந்தியாவின் மகாத்மாகாந்தி, மற்றும் ஜவஹர்லால் நேரு ஆகியோருடன் இணைந்து சுதந்திரப் போட்டத்தை முன்னெடுத்தது இக் கட்சியாகும் என்பதை வரலாறு கூறும்.

இதுவரை காலமும் எமது கட்சிக்கு எதிராக ஊழல் மோசடி குற்றச்சாட்டுக்கள் இடம்பெற்றதில்லை. ஏற்றத் தாழ்வு அற்றதும் சகலருக்கும் சுதந்திரமான கொள்கையுடன் இன்றும் எமது கட்சி தேசிய அரசியலில் செயற்படுகின்றது. எந்தவொரு இனமும் வேடர்களைப் போல் நடத்தப்படக் கூடாது.

இதனாலேயே கூட்டமைப்பினரை அப்பிரதேச மக்கள் ஆதரித்துள்ளனர். எனவே தமிழர்களின் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளக் கூடியவையாகும். அதிகாரப்பகிர்வு ஊடாகவே தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைகளுக்கு தீர்வு காணப்பட வேண்டும். அத்துடன் மத்திய அரசின் அதிகாரத்திலும் தமிழர்களுக்கென்று ஒரு பங்கு இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## வடபகுதி மக்கள் தம்மைத் தாமே ஆளும் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் – அமைச்சர் வாசுதேவ

வடபகுதி மக்களின் அபிலாஷைகளை புரிந்து கொண்டு அதற்கேற்ற வகையில் 13 ஆவது திருத்தத்திற்கு அப்பால் சென்று சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அரசியல் தீர்வினை அரசாங்கம் வழங்கவேண்டும் என ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், தேசிய மொழிகள் மற்றும், இனங்களிடையேயான நல்லிணக்கம் தொடர்பிலான அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார சென்னையில் இடம்பெற்ற இந்திய மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநாட்டில் குறிப்பிட்டுள்ளார்.

அவர் அங்கு மேலும் குறிப்பிடுகையில் அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் சில அரசியல் கட்சிகள் எதிர்த்தாலும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் இதனை வழங்க முடியுமென்றார்.

மாகாணங்களுக்கு பொலிஸ் அதிகாரங்களையும் வழங்கலாம். எவ்வாறெனில் இவ் அதிகாரங்களிலுள்ள முக்கியமானவற்றை அதாவது தேசிய பாதுகாப்புடன் தொடர்புபட்ட விடயங்களை மத்திய அரசாங்கம் வைத்துக் கொண்டு சிறு சிறு குற்றங்களை விசாரிக்கும் பொலிஸ் அதிகாரத்தை மாகாண சபைகளுக்கு வழங்க முடியும். இந்த நாட்டில் அரசாங்கத்திற்கு சொந்தமான காணிகளே அதிகம் உள்ளது. எனவே காணி அதிகாரங்களை மத்திய அரசாங்கமும் மாகாண சபைகளும் இணைந்த குழுவை அமைத்து வழங்க முடியும். அதனை நாம் ஆதரிக்கின்றோம் என்றார்

வடக்கு, கிழக்கு இணைப்பு என்பது ஜனநாயக ரீதியாக தீர்க்கப்பட வேண்டிய விடயமாகும். இவ் இணைப்பு தொடர்பாக கிழக்கு மாகாண மக்களின் விருப்பத்தை அறிய வேண்டும்.

## தோழர்களே! நண்பர்களே! வாசகர்களே!

அபிப்பிராயங்கள் விமர்சனங்கள்
ஆலோசனைகளையும் ஆக்கங்களையும்
வரவேற்கிறோம். அனைத்து நேரடித்
தொடர்புகளுக்கும்

EPIC
PO BOX 431
SUTTON SM1 9LE
UK
email:
eprlfp@yahoo.co.uk

P - Fach No: 506
Bern - 17,
Switzerland.

P - Box No: 7183
Arumpakkam,
Chennai - 106,
India.

29 A, வாவிக்கரை வீதி
மட்டக்களப்பு.
065 2225179

E.P.I.C., Box No: 95
95144 Garges Les,
Gonnesse Cedex,
France.

310, ஆஸ்பத்திரி வீதி
யாழ்ப்பாணம்.
021 2222022

159, கடல்முக வீதி
திருகோணமலை.
077 9634902

படிப்பகம்

www.padippakam.com



# மலையகத் தொழிலாளர்களைக் கூறுபோட்டு அரசியல் நடாத்தும் நிலையை மக்கள் நிராகரிக்க வேண்டும்

நமது நாட்டில் கடந்த 30 வருட காலமாக இடம்பெற்ற யுத்தகளமாக இருந்தாலென்ன அல்லது யுத்தம் முடிவுற்று அரசியல் மாற்றங்களுக்கான போராட்டமாக இருந்தாலென்ன உழைக்கும் வர்க்கமான பெருந்தோட்டத் தொழிலாளர்களின் அயராத உழைப்பில் என்றும் மாற்றம் இருக்காது. அதுபோல இந் நாட்டுக்கு நிரந்தர வருமானத்தை ஈட்டித்தரும் பெருந்தோட்டத்துறை வருமானத்தில் ஏற்றம், இறக்கம் இருக்குமே தவிர அது தொடர்ச்சியாக குறைந்து செல்லும் போக்கைக் கொண்டது கிடையாது என்ற நிதர்சனமான உண்மையை எவரும் மறுதலிக்க முடியாது.

ஆனால் மலையக உழைக்கும் மக்களின் வாழ்க்கைத் தரமோ எப்போதும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளது. ஒப்பீட்டு ரீதியில் முன்பு இருந்ததிலும் பார்க்க சற்று முன்னேற்றம் காணப்படுவது போல தோற்றமளித்தாலும். இன்றைய நவீனகால யுகத்தோடு பார்க்கையில் அவர்களின் அரசியல், பொருளாதார, கல்வி, கலாச்சார நிலைகளில் உரிய முன்னேற்றம் எதுவும் ஏற்பட்டுள்ளதாக திருப்தி கொள்ளமுடியாது.

சுதந்திரத்திற்கு பின் மலையகத் தமிழர்களின் பிரஜாவுரிமை பறிக்கப்பட்டு அது மீண்டும் வழங்கப்பட்டதானது அம் மக்கள் தமக்கான அரசியல் உரிமைகளை அனுபவிப்பதற்காக அல்ல மாறாக அப் பிரஜாவுரிமையை வழங்கிய அரசுகளுக்கு வாக்களிக்க மட்டுமேயான நிலைமையையே அது உருவாக்கியுள்ளது.

இவர்கள் வாக்களிக்க மட்டுமே உரித்துடையவர்கள். அரசியல் மற்றும் தொழிற்சங்க உரிமைகளுக்கோ, தங்களின் சிவில் வாழ்வுக்காகவோ, மனித உரிமைகளுக்காகவோ அல்ல என்பதாக தற்போதைய நடைமுறைகளில் தெளிவாகக் காணப்படுகிறது.

இம் மக்களின் நியாயமான அரசியல், தொழிற்சங்க போராட்டங்கள் கூட இன்று மிகவும் செயலிழந்து வலுவிழந்து சிதறிக் காணப்படுகின்றன. மக்களுக்கான அரசியல் கட்சி சார்ந்த தொழிற்சங்கங்களின் உண்மையான தொழிலாளர் பிரதிநிதிகளோ, சமூகத்திற்காக தம்மை அர்ப்பணிப்பு செய்தவர்களோ, அல்லது பின்தங்கிய சமூக மட்டத்திலிருந்து மக்களை முன்னேற்றுவதற்காக உண்மையாகவே உழைப்பவர்களோ தேர்தல்களின் போது அரசியற் கட்சிகளினால் வேட்பாளர்களாக நிறுத்தப்படுவதுமில்லை, அவ்வாறானவர்கள் மக்களால் தெரிவு செய்யப்படுவதுமில்லை. எமது சமூகத்திற்கு சம்பந்தமில்லாத, நேர்மையற்ற, சமூக குற்றவாளியாக காணப்படுவோர் மாதிரியான நபர்களே மக்கள் பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுகின்ற நிலைமை மலையகத்திலும் சர்வசாதாரண நிகழ்வாகிவிட்டது. இவ்வாறான நிலைமைக்கு மதில்மேல் பூனையாக எமது மத்தியில் காணப்படும் படித்தவர்கள் என்போர், ஊடகங்கள், அரசியல்வாதிகள் இதற்கு பாத்திரமானவர்கள்.

தொழிலாளர்களுக்காகவே தாம் செயற்படுவதாக தொழிற்சங்கங்கள் அத்தனையும் கூறிக்கொள்கின்றன ஆனால் தொழிலாளர்களின் பொது பிரச்சினையில்கூட தொழிலாளர் சக்தியை கூறுபோடுகிறார்கள். அரசுடன் இணைந்து செயற்படுகின்ற கட்சிகளும், தொழிற்சங்கங்களும் தாங்கள் வெவ்வேறு கொள்கைகளை கொண்டிருந்தாலும் மக்களின் பொதுநலன் சார்ந்த விடயத்திலாவது ஒன்றிணைந்து குரல் கொடுக்கத் தயங்குகிறார்கள்? அவர்கள் மக்களையும் கூறுபோட்டு மக்கள் சக்தியை பலமிழக்கச் செய்கின்றமை எமக்கு தெளிவாக தெரிகிறது. உதாரணமாக சம்பள உயர்வு பிரச்சினையை எடுத்துக் கொண்டால் தொழிலாளர்களுக்கு சம்பளம் அதிகரிக்கப்பட வேண்டும் என்பதில் எந்த தொழிற்சங்கத்துக்கும் மாற்றுக் கருத்து இருக்க முடியாது. ஆனால் அதற்கான தீர்வு விடயத்தில் ஒவ்வொரு தொழிற்சங்கமும் மற்ற தொழிற் சங்கத்துக்கு எதிராக வசைபாடுகின்றனவேயொழிய நியாயமான தீர்வுக்கான சாதக பாதக விடயங்களை மக்களுக்கு தெளிவுபடுத்துவதில்லை. மக்களோ தங்கள் தொழிற்சங்கத் தலைவன் கூறினால் அது சரியாகவே இருக்கும். என்று நம்பியிருக்கிறார்கள்.

இவ்வாறான விடயங்கள் பெருந்தோட்ட கம்பனிகளுக்கும், முதலாளிமார் சம்மேளனத்துக்கும் சாதகமாக அமைந்து விடுகின்றன.

ஒவ்வொரு தேர்தலிலும் வாக்களிக்கத் தவறாத இம் மக்கள் தெரிவு செய்யப்பட்ட தங்கள் பிரதிநிதிகளுக்கு ஏற்றவாறு தங்களை மாற்றிக்கொள்கிறார்கள் தவிர அப் பிரதிநிதிகள் மக்களுக்காக மக்களின் அரசியல், சமூக, பொருளாதார, கலாச்சார நலன் சார்ந்த விடயங்களுக்காக தங்களை மாற்றிக்கொள்வதில்லை

எனவே தொழிலாளர்கள் மத்தியில் காணப்படும் கல்விமான்கள், சமூக முற்போக்குவாதிகள், அரசியல் தொழிற்சங்க பிரதிநிதிகள் மக்களை தெளிவுறச் செய்தல் வேண்டும். அடிக்கடி அவர்களுடனான கலந்துரையாடல்களை மேற்கொள்ள வேண்டும். தொழிலாளர்களுக்கான சம்பள பிரச்சினை, லயன் முறையை மாற்றி புதியகுடியிருப்புகள், போக்குவரத்து, அனைத்து வீடுகளுக்கும் மின்சாரம், கல்வி வளர்ச்சிக்கான நடவடிக்கைகள், மலையகத்துக்கான கலாசாலை, பல்கலைகழகம், தொழில்நுட்ப வசதிகளை பெற்றுக்கொள்ளல் போன்ற விடயங்களில் பொது மக்களின் பிரதிநிதிகள் என்போர் ஒருமித்த கருத்துடன் செயற்பட முன்வருவதே எமது சமூகத்துக்கு செய்யும் கடமையாகும். அரசியல், தொழிற்சங்கங்கள் தங்களுக்கு மாற்றான வற்றுக்கு எதிராக மக்கள் மத்தியில் கருத்துக்களை முன்வைத்து செயற்படுவோரை மக்கள் இனம் கண்டு அவர்களை நிராகரிக்க வேண்டும்.

காலத்துக்குக் காலம் வெறுமனே தொழிற்சங்கத்துக்கு புதிய அங்கத்தவர்களை சேர்த்துக் கொள்வதிலும், தேர்தல் காலங்களில் மக்களிடம் செல்வதிலும் உள்ள அக்கறைக்கு மேலாக அடிக்கடி குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை தாங்கள் அனைவரும் கூடி அத்தோடு மக்களுடனும் கலந்து பேசுவதற்குரிய சந்தர்ப்பங்களை உருவாக்கி பொது நோக்குடன் செயற்பட முன்வர வேண்டும். அதுவே எமது எதிர்கால சந்ததியினருக்கு நாம் செய்யும் முக்கிய சேவையாகும்.

மக்கள் நலன் சார்ந்த செயற்பாடுகளை மக்கள் தெளிவுற புரிந்து செயற்படுவதற்கு எம் மத்தியில் உள்ள சேவை மனப்பான்மையுடைய கல்விமான்கள், சமூக நலன் விரும்பிகள் ஒன்றினைந்து எந்தவித எதிர்பார்ப்பும் இன்றி சில விடயங்களை மக்களைத் திரட்டி புரிய வைப்பதுவும் அவை பற்றி மக்களுடன் கலந்துரையாடுவது இன்றைய காலத்தின் தேவைகளாகும்.

## பாதுகாப்பற்ற புகையிரதக் கடவை




திருகோணமலை மாவட்டத்தின் நகர பகுதியை அண்மித்த பாலையூற்று பூம்புகார் வீதி, குடைமாதா வீதி வழியூடாகச் செல்லும் மக்களும், வாகனங்களும் இந்த ரயில் கடவை ஊடாகத்தான் பயணிக்க வேண்டியுள்ளது. இந்த கடவை ஊடாக ரயில் வரும் போது தடை போடப்பட்டு மக்களும் பாதுகாப்பாக பயணித்தனர். தற்சமயம் இந்த கடவையில் இருந்த தடை அகற்றப்பட்டுள்ளது. இதன் பின்பு கடந்த ஒரு மாதத்தில் இரண்டுக்கு மேற்பட்ட விபத்துக்கள் நடந்துள்ளன. இந்த விபத்தினால் அச்சமடைந்த அப் பகுதி மக்கள் அந்த ரயில் கடவையூடாக பயணிக்கும் புகையிரத வண்டியை மறித்து போராட்டம் நடத்தியுள்ளனர். காவல்துறையினர் தலையிட்டு போராட்டம் நடத்திய அம்மக்களை சமாதானப் படுத்தி அங்கிருந்து கலைந்து போகச் செய்தனர்.

எனினும் இதுவரையிலும் பாதுகாப்புத் தடை போடப்படவில்லை. பாடசாலை மாணவர்கள் அதிகமானோர் இந்த ரயில்வே கடவை ஊடாக கடந்து செல்வதால் சேதங்களை தவிர்க்கவும், ரயில்வே அதிகாரிகள் இவ்விடத்தை கவனத்திற் கொண்டு மக்கள் கடந்து செல்லும் ரயில்வே பாதையில் தடை போடப்பட வேண்டும் அதன் மூலம் பொதுமக்களை பாதுகாக்கும் நடவடிக்கையை மேற்கொள்ளலாம் என அப் பகுதி மக்கள் ரயில்வே அதிகாரிகளை மீண்டும் கேட்டுக் கொள்கின்றனர்.

தகவல் : சத்தியன்

## பத்திரிக்கையாளர் மீதான தாக்குதல் கருத்துச் சுதந்திரத்துக்கு விடுக்கப்பட்ட அச்சுறுத்தல்



உதயன் பத்திரிகை ஆசிரியர் குகநாதன் தனது வீட்டுக்கு அருகாமையில் வைத்து தாக்கப்பட்ட சம்பவம் ஜனநாயகம், மனித உரிமை பற்றிய பாரதூரமான கேள்வியை எழுப்புகிறது.

யுத்தத்தின் பின்னர் பாரிய வன்முறையற்ற சூழல் உருவாகி வருகையில் இத்தகைய சம்பவங்கள் மக்கள் மத்தியில் விரக்தியையும், பீதியையும் ஏற்படுத்தும்.

கருத்தை கருத்தால் எதிர்கொள்வதற்கான இடைவெளிகளை அகலப்படுத்துவது இன்றைய அவசியமாகும்.

ஜனநாயக சுதந்திரத்தின் அடிப்படையும் அதுவாகும்.

கடந்த காலத்திலும், ஊடகவியலாளர்கள் மீது தாக்குதல்கள் நடத்தப் பட்டுள்ளன. இதனால் பல ஊடகவியலாளர்கள் நாட்டைவிட்டு ஓடும் நிலை ஏற்பட்டுள்ளது.

உதயன் பத்திரிகையாளரின் தாக்குதலில் சம்பந்தப்பட்டவர்களை கைது செய்து சட்டத்தின் முன் நிறுத்துவது அரசின் கடமையாகும்.

**தி. ஸ்ரீதரன்**
பத்மநாபா ஈ.பி.ஆர்.எல்.எப்
பொதுச் செயலாளர்

படிப்பகம்

www.padippakam.com



# தொழிலாளர்களின் சம்பள உயர்வு கூட்டு ஒப்பந்தத்தின் பின் முதலாளிமார் சம்மேளனம் உற்பத்தி திறனை அதிகரிக்க விடுத்த கோரிக்கை சம்பந்தமாக தலைவர்கள் தெரிவித்த கருத்துக்கள்




## பொருளாதார அபிவிருத்தி பிரதி அமைச்சர் முத்துசிவலிங்கம் பா.உ (இ.தொ.கா)

பறிக்க வேண்டிய கொழுந்தின் அளவை ஒரே அளவாக வைத்திருக்காது சந்தர்ப்பத்திற்கேற்ப கூட்டுவதும் குறைப்பதுவும் நடைபெற வேண்டும்.

13 கிலோ பறித்தாலும் ஒரு நாள் கூலிக்கு பெயர் போடுகிறார்கள் ஏழு கிலோ எடுத்தாலும் அவ்வாறே பெயர் போடுகின்றார்கள்.

ஒரு கிலோ தேயிலை 40 ரூபாய்குத்தான் போகின்றது. எனவே இங்கு 520 ரூபாய்தான் கிடைக்கின்றது. இதில்தான் சம்பளம், ஊழியர் சேமலாபநிதி, ஊழியர் நம்பிக்கை நிதியம் என்பனவற்றை வழங்க வேண்டியுள்ளது.



## ஆர்.யோகராஜன் பா.உ (ஐ.தே.க.)

1992 இல் 4,30,000 ஆக பணிபுரிந்த தொழிலாளர்கள் 18 ஆண்டுகளின் பின் 2010ம் ஆண்டு 2,10,000 ஆக குறைவடைந்துள்ளது.

உற்பத்தி 25 வீதம அதிகரித்துள்ளது. ஒவ்வொருவரும் ஆண்டுக்கு இரண்டரை சதவீதம் உற்பத்தியை அதிகரித்துள்ளனர்.

உற்பத்தித் திறனை அதிகரிக்க தொழிலாளர்கள் செய்ய வேண்டியது ஒன்றும் இல்லை. மாறாக தோட்டங்கள் சிறந்த முறையில் பராமரிக்கப்பட வேண்டும்.

சிறு தோட்டங்களில் ஹெக்டேயருக்கு 2300 கிலோ உற்பத்தியை பெறும் போது கம்பனிகள் 1200 கிலோ தேயிலையையே உற்பத்தி செய்கின்றனர்.

தோட்டங்கள் அனைத்தும் 10 கோடி ரூபாய்க்கு குத்தகைக்கு எடுக்கப்பட்டன. ஒரு கம்பனி மாத்திரம் 60 கோடி ரூபாயை இலாபமாக ஈட்டியிருக்கிறது. ஒவ்வொரு கம்பனியும் 240 மில்லியன் ரூபாவை இலாபம் காட்டியிருக்கிறது.

ஓவ்வொரு வருடமும் 2 வீதம் மீள்நடுகை செய்யப்பட வேண்டும் ஆனால் 0.2 வீதமே மீள் நடுகை செய்யப்படுகிறது. 1,70,00 ஏக்கர் தரிசு நிலமாக இருக்கிறது.

1993 இல் 53 வருட குத்தகைக்கு கம்பனிகளுக்கு கொடுக்கப்பட்டன. தற்போது 18 வருடங்கள் கழிந்து விட்டன.

கொழுந்து பறிக்க வேண்டிய அளவை அதிகரிப்பது சம்பள அதிகரிப்பாக கொடுத்துள்ள 110 ருபாயிலிருந்து ஒரு தொகையை (இரண்டு கிலோ- 34 ரூபாய்) மீளப்பெற்றுக் கொள்ளும் மூலோபாயமாகும்.



## அகில இலங்கை தோட்ட சேவையாளர் சங்கம் இராமலிங்கம் சந்திரசேகரன் ஜே.வி.பி

ஒப்பந்தத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு அதிகமாக தொழிலாளர்கள் கொழுந்து அதிகம் பறிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படக்கூடாது.

தமக்கு தேவையானபோது தோட்டங்கள் இலாபமாக இயங்குவதாகவும், தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரினால் நட்டம் என ஒப்பாரி வைப்பதும் முதலாளிமார் சங்கத்தின் வழக்கமாகிவிட்டது. தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோருவது கால் வயிற்றுக் கஞ்சியை அரை வயிற்றுக் கஞ்சியாக குடிப்பதற்கே அன்றி மாட மாளிகைகள் கட்டுவதற்காக அல்ல.தேயிலை விலை வீழ்ச்சியை பற்றிப் பேசுபவர்கள் இறப்பர் விலை அதிகரிப்புப் பற்றி பேசுவதில்லை.

கொழுந்து பறிக்கும் அளவை அதிகரிக்குமாறு நிர்ப்பந்திக்கும் போது தொழிலாளர்கள் தங்கள் எதிர்ப்பை காட்ட முனைவார்கள். அதற்கு எமது ஆதரவை வழங்கி வருகின்றோம்



## ஜனாதிபதி ஆலோசகர் வி. புத்திரசிகாமணி

பயிற்றப்படாத தொழிலாளர்கள் 30 வருடங்கள் கழிந்தும் அவ்வாறே ஓய்வுபெற்று வெளியேறுகின்றனர். புதிதாக வேலைக்கு சேர்ந்தவர்களுக்கும் 30 வருடங்கள் பணிபுரிந்தவர்களுக்கும் ஒரே சம்பளம் வழங்கப்படுகிறது.

தொழிலாளர்களின் உழைப்புக்கு ஏற்ற ஊக்குவிப்பு கொடுப்பனவு வழங்கினால் உற்பத்தி திறனை அதிகரிக்கலாம்.

தேயிலை உற்பத்தி செய்யும் ஏனைய நாடுகளில் தொழிலாளர்களுக்கு வழங்கப்படும் சம்பளத்தைவிட இலங்கையில் வழங்கப்படுவது அதிகம் என முதலாளிமார் சங்கம் தெரிவிப்பது தமது நலன்களுக்கு சாதகமான கூற்றுக்களாகும்.

இலங்கையில் முதலாளிமார் சங்கம் தொழிலாளர்கள் வாழ்வதற்கான சம்பளம் வழங்கப்பட்டதில்லை.

## விவசாய தோட்டத் தொழிலாளர் காங்கிரஸ் வி.எம். கிருஷ்ணசாமி

தொழிலாளர்கள் எத்தனை கிலோ கொழுந்து பறிக்க வேண்டும் என்பதை தோட்ட நிர்வாகமும் தொழிலாளர்களும் பேசி கூட்டு ஒப்பந்தத்தில் தீர்மானிக்க வேண்டும்.

தோட்டங்களில் பல தொழிற்சங்கங்கள் ஒற்றுமையாக இருப்பதில்லை. தோட்டத்துரைமார்களிடம் சலுகைகளை பெற்றுக்கொள்வதற்காக ஒரு தொழிற்சங்கத் தலைவர் 20 கிலோ பறிக்க முடியாதென்றால் இன்னொரு தலைவர் 22 கிலோ பறிக்கலாம் என்று சொல்லுகின்ற சூழ்நிலைதான்.

கூட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டவர்களே 18 கிலோ கொழுந்து பறிக்க வேண்டாம் என்கின்றனர். அவர்கள் தொழிலாளர்களை தூண்டிவிடுகின்றனர்.

இதனால் வேலை நிறுத்தம் செய்து வெற்றியடைய முடியாத சூழ்நிலையே காணப்படுகிறது.

தோழிற்சங்க நடவடிக்கை என்றில்லாமல் மக்கள் எழுச்சி ஏற்படவே வாய்ப்பு உண்டு

## செங்கொடி சங்கம் ஓ.ஏ. இராமையா

ஒரு தொழில் ஆரம்ப காலத்தில் போன்றே அதேவிதமாக நடைபெறுவதில்லை.

உற்பத்தி திறன் அதிகரிப்பு என்பதை சிலர் விளங்கிக்கொள்ளாமல் அதனை கொழுந்து பறிக்கும் அளவோடு முடிச்சு போடுகிறார்கள்.

கூட்டு ஒப்பந்தத்தில் பறிக்கப்பட வேண்டிய கொழுந்தின் அளவு அதிகரிக்குமாறு தோட்ட நிர்வாகம் கேட்பதற்கான உரிமை அவர்களுக்கு உண்டு. அதுபோல் தொழிலாளர்கள் அதற்கு கட்டாயம் உடன்பட வேண்டும் என்ற கட்டாயம் இல்லை. தோட்டத் தலைவர்மார் நிர்வாகம் கலந்து ஆலோசித்து முடிவு எடுக்கலாம்.

சனிக்கிழமை பறிக்கும் கொழுந்தின் அளவே ஞாயிற்று கிழமைகளிலும் பறிக்கலாம்

தேயிலையினால் கிடைக்கும் இலாபம் இடைத்தரகளிடமே போய்ச் சேர்கின்றது. உற்பத்தியாளர்களை சென்றடைவதில்லை.

முதலாளிமார்- தொழிலாளர்கள் இணைந்து செயற்பட்டால் இரு சாராரும் நலன் பெறலாம்

ஒப்பந்தத்தில் தீர்மானிக்கப்பட்டதற்கு அதிகமாக தொழிலாளர்கள் கொழுந்து அதிகம் பறிப்பதற்கு நிர்ப்பந்திக்கப்படக்கூடாது.

தமக்கு தேவையானபோது தோட்டங்கள் இலாபமாக இயங்குவதாகவும், தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோரினால் நட்டம் என ஒப்பாரி வைப்பதும் முதலாளிமார் சங்கத்தின் வழக்கமாகிவிட்டது.

தொழிலாளர்கள் சம்பள உயர்வு கோருவது கால் வயிற்றுக் கஞ்சியை அரை வயிற்றுக் கஞ்சியாக குடிப்பதற்கே அன்றி மாட மாளிகைகள் கட்டுவதற்காக அல்ல.

தேயிலை விலை வீழ்ச்சியை பற்றிப் பேசுபவர்கள் இறப்பர் விலை அதிகரிப்புப் பற்றி பேசுவதில்லை.

கொழுந்து பறிக்கும் அளவை அதிகரிக்குமாறு நிர்ப்பந்திக்கும் போது தொழிலாளர்கள் தங்கள் எதிர்ப்பை காட்ட முனைவார்கள். அதற்கு எமது ஆதரவை வழங்கி வருகின்றோம்

நன்றி : வீரகேசரி (24-07-2011)




# தோழர் பத்மநாபாவின் நினைவாக மூக்குக் கண்ணாடி




கண் பரிசோதனை செய்து உடனே கண்ணாடி வழங்கும் நிகழ்வொன்று கடந்த 14-08-20100 அன்று காலை 10.00 மணி முதல் பிற்பகல் 1.00 மணிவரை திருகோணமலை கும்புறுபிட்டி மெதடிஸ்த மிஷன் தமிழ் கலவன் பாடசாலை யிலும் பிற்பல் 2.00 மணி முதல் பிற்பகல் 5.00 மணிவரை 6ம் கட்டை ஆத்திமேட்டி மெதடிஸ்த ஜெப பாலர் பாடசாலையிலும் இடம்பெற்றது. இந் நிகழ்ச்சி திருகோணமலை மாவட்ட பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தோழர்களினுடைய உதவியுடன் தோழர் சிவக்குமார் (சத்தியன்) மேற்கொண்ட ஏற்பாட்டின்படி ஒழுங்கு செய்யப்பட்டது. இந் நிகழ்ச்சியில் முன்னாள் வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் திரு. அ. வரதராஜப்பெருமாள் அவர்கள் சிறப்பு பிரதிநிதியாக கலந்து கொண்டார். அவர் அங்கு உரையாற்றுகையில்

நல்ல தலைவர்களை மக்களாகிய நீங்கள்தான் தெரிவு செய்ய வேண்டும். உடனடியாக கிடைப்பவற்றைக் கொண்டு மேலும் முன்னேறுவதற்கு முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும் என்பதையே எமது கடந்தகால அனுபவங்கள் எமக்குக் கற்றுத் தருகின்றன. இந் நிகழ்ச்சியை ஒழுங்கு செய்த பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் திருகோணமலை மாவட்ட தோழர்களுக்கு பாராட்டு தெரிவித்ததுடன் எதிர்வரும் காலங்களில் இவ்வாறான சேவைகளை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டுமெனவும் கேட்டுக் கொண்டார்.

படிப்பகம்

www.padippakam.com



# அன்பார்ந்த நண்பர்களே! ஆற்றல்மிகு தோழர்களே!



யுத்தத்தால் அழிந்த வடக்கு கிழக்கு பிரதேசங்களும் தமிழ் மக்களின் புனர் வாழ்வும் மீண்டும் விரைவாகக் கட்டி யெழுப்பப்படுவதற்கு இலங்கை அரசாங்கம் குறைந்த பட்சம் எவற்றை உடனடியாகச் செய்ய வேண்டும் என்பதை கடந்த கண்ணோட்டத்தில் நான் எழுதிய கடிதத்தின் இறுதிப் பகுதியில் குறிப்பிட்டிருந்தேன். இந்தக் கடிதம் அதன் தொடர்ச்சியாக இருக்கும் என்பதையும் அதில் குறிப்பிட்டிருந்தேன்.

புலிகளின் வக்கிரமான அரசியலினால் முள்ளிவாய்க்கால் வரை அப்பாவித் தமிழ்மக்கள் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்டோர் யுத்தகளத்தை விட்டு வெளியேறித் தப்ப முடியாமல் உள்ளே அகப்பட்டு உயிர் இழப்புகளுக்கும் மற்றும் சொல்லொணா அவலங்களுக்கும் உள்ளாக வேண்டி ஏற்பட்டது. கடைசியாக உண்ண உணவின்றியும் உடுத்த மாற்று உடையின்றியும் எந்த நிமிட நேரத்திலும் தாமும் அரச படைகளின் குண்டுத் தாக்குதல்களுக்கு உள்ளா கியோ அல்லது அதிலிருந்து தப்ப முற்பட்டால் புலிகளின் துப்பாக்கிகளுக்குப் பலியாகியோ கொல்லப்படக் கூடும் என - ஒரு புறம் சிங்கம் மறுபுறம் புலி என்ற நிலை யில் - ஏற்கனவே கொல்லப்பட்ட பிணங்களின் மத்தியில் உயிரைக் கையிற் பிடித்தபடி வாழவேண்டியவர் களாக ஆக்கப்பட்டு இருந்தனர். அப்போது அவர்களின் கண்முன்னால் சாவுகள் தொடர்ந்த வண்ணம் நடந்தேறிக்கொண்டிருந்தன.

சிறி லங்கா அரசோ புலிகளை முழுமையாக அழித்து கடைசித் துளி நிலத்தையும் பூரணமாகத் தமது படைகள் கைப்பற்றும் வரை யுத்தத்தை நிறுத்துவதில்லை என்ற ஓர்மத்துடன் செயற்பட்டது. ஆனால் தம்மை ஐக்கிய நாடுகள் சபையோ அல்லது அமெரிக்காவோ விமானம் மூலமாகவோ அல்லது கப்பல் மூலமாகவோ முல்லைத்தீவு கடற்கரை வரை வந்து காப்பாற்றும் என்ற எதிர்பார்க்கையில் இருந்த புலிகளின் தலைவர்களோ இலட்சக்கணக்கான தமிழர்களின் உயிர் அழிவுகளைப் பற்றி கொஞ்சமும் கவலைப்படாமல் மக்களை வெறுமனே தாம் தப்புவதற்கான கேடயமாக துப்பாக்கி முனையில் வைத்திருந்தனர். அந்த வளையத்திலிருந்து தப்பிச்செல்ல எந்தத் தமிழருக்கும் துணிவு வரவிடாது தடுப்பதற்காக எல்லாவகையான பயங்கர முறைகளையும் தமிழர்கள் மீது புலிகள் பிரயோகித்தனர்.

புலிகளோ யுத்தகளத்தில் தமக்குக் கேடயமாக வைத்திருந்த மக்களிற் பலர் கூட்டம் கூட்டமாக வெவ்வேறு முனைகளில் தப்பமுயன்ற போது ஈவிரக்கமின்றி அந்தத் தமிழர்கள் மீது துப்பாக்கிகளால் குண்டு மழை பொழிந்தும், பீரங்கித் தாக்குதல்களை நடாத்தியும் கொன்றனர், தப்பமுயன்ற வர்களிற் சிலர் புலிகளிடம் பிடிபட்ட போது அவர்களை புலிகள் தமது வளையத்துக்குள் இருந்த பொது மக்கள் முன்னாலேயே கொடூரமாகச் சித்திரவதைகள் செய்தனர், குரூரமாகக் கொன்றனர். அதன் மூலம் பார்த்துக் கொண்டு நின்ற தமிழர்களில் எவருக்கும் புலிகளின் கேடய வளையத்திலிருந்து தப்புவதற்கான நினைப்பு கிஞ்சிற்றும் வராதிருக்கும் வகையானதொரு பயங்கர மனோ நிலையை நிலைநாட்டினர். இங்கு கூறப்பட்டவைகள் யாருடைய ஊகத்திலிருந்தும் கூறப்படுபவையல்ல. யுத்தகளத்தில் புலிகள் எவ்வாறு நடந்து கொண்டார்கள் என்பதை யுத்தத்தில் கடைசிவரை இருந்து தப்பிய தமிழர் ஒவ்வொரு வரிடமிருந்தும் அவர்கள் சொல்லும் யுத்தகள கதைகளில் இருந்து அறிந்து கொள்ளலாம்..

இதேவேளை மறுபக்கமாகப் பார்த்தால் யுத்த களத்தில் இலங்கை அரசோ புலிகளுக்கு எதிரான தனது யுத்தத்தை எவ்வளவு விரைவாக வென்று முடிக்க முடியுமோ அவ்வளவு விரைவாக வெற்றியை நிலைநாட்டுவதற்கான ஒரே முனைப்பில் செயற்பட்டது. அதற் குரிய வகையில் எல்லா விதமான தாக்குதல் முறைகளையும் பிரயோகித்தது. மேலைத் தேய நாடுகளின் அழுத்தம் அதிகரிக்கும் பட்சத்தில் அதன் காரணமாக அது ஐக்கிய நாடுகள் பாதுகாப்புச் சபையின் ஒரு தீர்மானமாகிவிடக்கூடும். அதன் காரணமாக ஒரு யுத்த நிறுத்த த்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய தொரு கட்டாய நிலைமைக்கு உள்ளாகக் கூடும் என்ற ஒரு பதறல் நிலை சிறி லங்கா அரசிடம் இருந்திரு ந்தமை தெரிகிறது.

அதேவேளை தனது யுத்த கள முன்னேற்றத்துக்கு நேரடியாகவும் மறைமுகமாகவும் இந்தியா தந்து கொண்டிருக்கும் உதவியும் அனுசரணையும் எவ்வளவு காலத்துக்கு தொடர்ந்து நீடிக்கும் என்ற விசனமும் சிறிலங்கா அரசிடம் ஏற்பட்டிருந்தது. இந்திய அரசானது யுத்தத்தில் புலிகளின் அழிவைப் பற்றி கவலை கொள்ளாவிடினும் எங்கே தமிழகத்தின் அரசியல் காரணமாக ஓர் உடனடி யுத்த நிறுத்தத்துக்கு அழுத்தம் கொடுத்து விடுமோ என்ற அச்சமும் இலங்கை அரசிடம் இருந்திருக்கிறது.

சர்வதேச யுத்தக்கட்டுப்பாடுகள் எதனையும் புலிகள் கடைப்பிடிக்கப் போவதில்லை என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. இலங்கை அரச படைகள் மட்டும் சர்வதேச யுத்தக் கட்டுப்பாடுகளைக் கடைப்பிடித்தால் அது புலிகளுக்கு நீண்டகாலத்துக்கு நின்று பிடித்து சண்டை பிடிப்பதற்கான சந்தர்ப்பங்களையே வழங்கும் என்பதுவும் புரிந்து கொள்ளப்படக் கூடிய ஒன்றே. இதனால் இலங்கை அரசு, சர்வதேச யுத்தக் கட்டுப்பாடுகள் அத்தனையையும் ஒருபுறம் ஒதுக்கி வைத்துவிட்டு, மிகக் குறுகிய காலத்தில் யுத்த வெற்றியை நிறைவேற்றும் வகை யாக யுத்த தந்திரோபா யங்கள் அனைத்தையும் பிரயோகித்திருக்கிறது என்பதை யுத்தத்தின் போக்குகளையும் விளை வுகளையும் அவதானித்த வர்களால் நன்கு புரிந்து கொள்ள முடியும்.

தனது படைகள் வெற்றியை நோக்கி தங்குதடையின்றி முன்னேறுவதற்கு உரிய வகையில் கட்டுப்பாடற்ற உரிமைகளை இலங்கை அரசு தனது படைத் தளபதிகளுக்கு கீழ் மட்டம் வரை வழங்கியிருந்திருக்கிறது என்பதை எம்மால் புரிந்து கொள்ள முடிகின்றது. இதனால் நூறு அப்பாவி மக்கள் கொல்லப்பட்டாலும் பரவா யில்லை ஒரு புலியும் தப்பிவிடக் கூடாது என்ற யுத்த இலக்கண த்தையே அரச படைத் தலைவர்கள் யுத்தத்தின் கடைசிக் கட்டத்தில் பிரயோகித்திருக்கின்றார்கள் என்பதை பல்வேறு யுத்தகளத் தகவல்களும் மற்றும் தொடர்பான மூலங்களும் தெரிவிக்கின்றன.

மாவிலாறில் தொடங்கி கிளிநொச்சி யின் எல்லை வரைக்கும் யுத்த நிறுத்தத்துக்கும் பேச்சுவார்த்தைக்கும் மஹிந்தவின் அரசாங்கம் தயாராக இருந்தது. ஆனால் புலிகள் அதுவரை தயாராக இருக்கவில்லை. இலங்கை அரசு புலிகளை புதுக்குடியிருப்புக்குள் முடக்கியதன் பின்னர் எந்த வகையானதொரு யுத்தநிறுத்தத்துக்கு ஒப்புக் கொண்டாலும் அது தான் அதுவரை வென்ற அவ்வளவையும் இழக்க வைத்து விடும் என்று கணித் துக் கொண்டது. இதனால் இலங்கை அரசு யுத்தத்தை நந்திக்கடலுக்கு அண்மையில் பிரபாகரன், பொட்டம்மான் மற்றும் சூசை ஆகியோர் வளைக்கப்பட்டு அரசபடைகளின் பொறிக்குள் விழுத்தப்படும் வரை விடாது முன்னெடுத்தது.

நந்திக் கடலுக்கு அண்மையில் பிரபாகரனின் கொல்லப்பட்ட உடலின் காட்சி உலக மக்களின் கண்களுக்குக் காட்டப்பட்ட அந்தத் தினத்தோடுதான் அரச படைகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான யுத்தமும் முடிவுக்கு வந்தது.

> **புலிகளின் வக்கிரமான அரசியலினால் முள்ளிவாய்க்கால் வரை அப்பாவித் தமிழ் மக்கள் மூன்று லட்சத்துக்கும் மேற்பட்டோர் யுத்த களத்தை விட்டு வெளியேறித் தப்ப முடியாமல் உள்ளே அகப்பட்டு உயிர் இழப்புகளுக்கும் மற்றும் சொல்லொணா அவலங்களுக்கும் உள்ளாக வேண்டி ஏற்பட்டது**

முள்ளிவாய்க்காலில் கொல்லப் பட்டவர்களின் எண்ணிக்கை மொத் தத் தில் நாலாயிரமா? அல்லது நாற்பதாயி ரமா? அல்லது நாலாயிரத்துக்கும் நாற்பதாயிரத்துக்கும் இடையில் எத் தனை ஆயிரம் என்பவையெல்லாம் இன்று விவாதத்துக்குரிய எண்ணிக்கை களாகிவிட்டன.

ஆனால் மூன்று லட்சம் மக்கள் மீண்டார்கள் - மீட்கப்பட்டார்கள். அவர்களை முட்கம்பிகளால் அடைக்கப் பட்ட முகாம்களில் அகதிகளாக வைக்கப்பட்டிருந்தார்கள் அது சரியா? அல்லது பிழையா? என்ற விவாதம் ஒருபுறமிருக்க, அவ்வளவு தமிழர் களுக்கும் உணவளித்தல், உடைகள் விநியோகம் செய்தல், யுத்தமல்லாத சூழலில் உறங்க இடங்களமைத்துக் கொடுத்தமை போன்ற கடமைகளை இலங்கை இராணுவத்தினர் செய்தனர் என்பதை நாம் மறந்துவிடவோ அல்லது மறைத்து விடவோ முயன்றால் அது எமது மனச்சாட்சிக்கு நியாயமான தல்ல.

இடவசதி போதியதாக இருக்க வில்லை, போதிய அளவு மலசல கூட வசதிகள் இல்லை. தாராளமாக உணவுப்பொருட் கள் மற்றும் அத்தியாவசியப் பொருட்கள் வழங்கப்படவில்லை என்பதெல்லாம் குற்றச்சாட்டுகள். அதேவேளை உள்ளூர் சமய நிறுவனங்களும், சமூகத் தொண்டு நிறுவனங்களும் மற்றும் செஞ்சிலுவைச் சங்கம் போன்ற பல சர்வதேச நிறுவன அமைப்புக்களும், நாட்டின் பல்வேறு அரசியற் கட்சிகளும் அன்று யுத்தத் தால் பாதிக்கப்பட்டு நின்ற மக்களுக்கு தாராளமாக உதவுவதற்குத் தயாராகவே இருந்தனர்.

அந்த வேளையில் சிறிலங்கா அரசானது சமூகத் தொண்டு நிறுவ னங்களின் மீதான தனது சந்தேகங் களுக்கு அளவுக்கு அதிகமாக முக்கியத்துவம் கொடுக்காமல் பாதிக்கப்பட்டு நின்ற மக்களின் அவல நிலைமைகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து அவசியமான அளவுக்கு மேலல்லாத குறைந்தபட்ச கட்டுப்பாடுகளோடு அந்த சமூக சமய நிறுவனங்களை தாராளமாக மக்களுக்கு உதவும் வகையில் செயற்பட இலங்கை அரசு அனுமதித் திருந்தால் அகதி களான தமிழ் மக்கள் இராணு வத்தினரால் வளைக்கப்பட்ட முட்கம்பி வேலி முகாம்களில் கொண்டிருந்த பற்றாக்குறைகளையும் அனுபவித்த சிரமங்களையும் மிகக் கணிசமாகக் குறைத்திருக்கலாம்.

எவை எவையெல்லாம் அன்று நடந்தனவோ இன்று அவையெல்லாம் நடந்து முடிந்த வரலாறுகள் ஆகிவிட்டன.

யுத்தத்தால் வன்னியில் இடம் பெயர்ந்த மூன்று இலட்சம் மக்களிற் 90 சதவீதத்துக்கும் மேற்பட்ட மக்கள் அவரவரது இடங்களுக்குச் சென்று குடியேறி விட்டார்கள்.

யாழ்ப்பாணத்திலும் உயர்பாதுகாப்பு வலயம் அரைவாசி அளவுக்கு குறைக் கப்பட்டு அந்தப் பகுதிகளில் மக்கள் மீண்டும் குடியேறி விட்டார்கள்.

யுத்தகளத்திலும் அந்த முட்கம்பி களால் மூடப்பட்ட முகாம்களுக் குள்ளும் கொடுத்த இழப்புக்கள், பட்ட வேதனை கள், அனுபவித்த சிரமங் களின் வரலாற்றை கீறிக்கிழித்து ஆய்வுப் பரிசோதனை செய்வது ஓர் அனுபவ அறிவுக்குப் பயன்படலாம். ஆனால் அவற்றைக் காட்டியும் கூறியும் மக்களுக்கு ஆத்திரத்தை ஊட்ட முற்படுவதால் யாருக்கு என்ன பயன் கிடைக்கும்?

இன்னொரு முறை இப்படி நடந்து விடக் கூடாது – எக்காரணம் கொண்டும் அப்படி நடக்காது என்பதை உறுதிப்படுத்தும் கடமைகளை நிறைவேற்றுவதற்கு நடந்து முடிந்த உண்மைகளும் அவற்றிலிருந்து கற்றுக் கொள்ளும் அனுபவங்களும் இலங்கை அரசுக்கும், தமிழ் - சிங்கள அரசியல் சமூக மற்றும் சமயத் தலைவர்களுக்கும் படிப்பினைகளாக வேண்டும்..

இப்படிக்கு
உங்கள் அன்பின்

**அ. வரதராஜப்பெருமாள்**

படிப்பகம்

www.padippakam.com



ச.சுந்தரலிங்கம் மல்லாகம்

***கேள்வி :- சமீபத்தில் நடைபெற்ற உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தல்களில் வடக்கிலும், கிழக்கிலும் அநேகமானோர் தமிழர் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்தவர்களே பெரும் பான்மையாகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருக் கிறார்கள். அதுபற்றி என்ன நினைக்கிறீர்கள்?***

**பதில்:-** இதில் ஆச்சரியப்படுவதற்கு ஒன்றுமில்லை. நான் எதிர்பார்த்தது தான். அதேபோன்று சிங்கள பிரதேசங் களில் மகிந்த ராஜபக்ஷ தலைமையி லான ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினரைச் சேர்ந்தவர்கள்தான் அமோக வெற்றியீட்டியிருக்கிறார்கள்.

கடந்த ஆறு தசாப்த காததில் 1994ம் ஆண்டு நடைபெற்ற பொதுத்தேர்தல் மற்றும் ஜனாதிபதித் தேர்தல் தவிர ஏனைய அனைத்து தேர்தல்களிலும் எந்தக் கட்சி சிங்களவர்- தமிழர் இன முரண்பாட்டையே தேர்தல் பிரச்சாரங் களின் மையப்பொருளாக்கி அதன் பிரச்சாரங்களில் அந்த முரண் பாட்டைக் கூர்மைப்படுத்துகிறதோ அதுவே பெரும்பான்மைக் கட்சியாக வெற்றியீட்டும் போக்கினையே நாம் கண்டு வருகின்றோம்.

ஒரு நாட்டு மக்களால் கவனம் செலுத் தப்பட வேண்டிய, மக்களின் மேம் பாட்டுக்கு அத்தியாவசியமான, பொருளாதாரக் கொள்கைகள், விலைவாசி மாற்றங்கள், கல்வி, வேலைவாய்ப்புக்கள், ஊழலற்ற நிர்வாகத் திறன்கள், பிறநாடு களுடனான உறவுகள், வேட்பாளர் களின் தராதரங்கள் ஆகியவை பற்றிய விவாதங்கள் எதுவும் முன்வை க்காது இன விரிசல்களை விரிவாக்கு பவர்களே தேர்தல்களில் வெற்றியை உறுதி செய்வதற்கான இன்றியமையாத ஒதே தகமை என்ற நிலைமையே தொடர்ந்து இன்றும் இருந்து வருகிறது. இதுவே இலங்கை மக்களின் சாபக்கேடாகும்.

இந்த நிலைமை இருக்கும் வரை நாட்டு மக் களின் வாழ்வாதாரங்கள் வளர்ச்சியடையாது பாதிகப்படுபவர்கள் அனைத்து இனங்களினதும் அடித்தள மக்களே. இதை உணராத அந்த அடித்தள மக்களே அதை அவர்கள் உணர வைக்காது அரசியல் அதிகாரங்களைப் பெறுவோருக்கு துணை போகிறார்கள். எந்த நாட்டிலும் இல்லாதவாறு, இலங்கையில் உள்ளூராட்சி சபைக்கான தேர்தல்களிலும் இந்த முரண்பாடே நிர்ணய சக்தியாக திட்டமிட்டுத் திணிக்கப்படுகிறது.

இந்த நிலைமை மாற வேண்டுமானால் இலங்கையின் அனைத்துச் சமூகமும் சுபிட்சமாக வாழ வேண்டுமானால் அரசியல் களத்திலிருந்து இந்த இன முரண்பாடு களையப்பட வேண்டும். அனைத்து சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக்கூடிய நியாயமானதும், நிரந்தரமானவுமான அரசியல் தீர்வு காலதாமதமின்றி எய்தப்படல் வேண்டும். அப்பொழுதுதான் மக்களின் கவனம் மற்றைய விடயங்களில் திரும்பவேண்டி வரும்.

ஆனால், அது ஈடேறுவதற்கான உடனடிச் சாத்தியக்கூறுகள் தென் படவில்லை. இன முரண்பாடுகளைக் கூர்மைப்படுத்தி அதன் மூலமாகவே அரசியல் அதிகாரங்களையும் அவை தரும் பதவி சுகங்களையும் அனுபவிப்பவர்கள் அது ஈடேற விடப் போவதில்லை.

ஆரம்பக் கட்டத்தில் ஆயுதப் போராட்டம் இனப்பிரச்சினை க்கான ஒரு தீர்வை ஏற்படுத்தும் என எண்ணினேன். ஆனால் அதுவும் அர்த்தமற்றுப் போய்விட்டது. இரு இனங்களின் தரப்பிலும் இன முரண்பாட்டைக் கூர்மையாக்கு வோர்களினதும், அவர்களுடன் அருகில் அண்டி வாழ்வோர்களினதும் காட்டில்தான் மழை. அவர்களை நம்பி வோட்டு போடும் அடித்தள ஏழை மக்கள் வாயில்தான் தொடர்ந்தும் மண்.

டி.ஜெயராஜா பிரான்ஸ்

***கேள்வி:- இலங்கையின் கொலைக் களம் என்ற பெயரில் காண்பிக்கப் பட்ட காணொளி பற்றிய தற் போதைய நிலைமை என்ன?***

**பதில்:-** அந்தக் காணொளி இந்தியா, அமெரிக்கா, கனடா, அவுஸ்திரேலியா ஆகிய நாடுகளிலுள்ள தொலைக் காட்சிகளிலும் காண்பிக்கப்பட்டுள்ளது. அதனைத் தயாரித்த சனல்-4 என்ற லண்டன் தொலைக்காட்சியின் தயாரிப் பாளர் பிற நாடுகளிலுள்ள மனித உரிமை அமைப்புக்களின் அனுச ரணையுடனும் ஆதரவுடனும் அந்தப்



படுகொலைகளுக்குக் காரணமாக விருந்தோருக்கு எதிராக ஐ.நா வின் மனித உரிமைக்கான அமைப்பு தகுந்த நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்ற முனைப்புடன் அது தனது தொண்டு என்ற நிலைப்பாட்டை எடுத்துக் கொண்டவர்போல், செயற் பட்டு வருகிறார். இலங்கை அரசு அந்தக் குற்றச்சாட்டுக்கள் உண்மை யல்ல. தாம் மேற்கொள்ளும் விசா ரணைகளின் பின்னர் அவை உண்மையென நிரூபணமானால் குற்றவாளிகளுக்கெதிராக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்படும் எனவும் கூறி வந்தது. இப்பொழுது கைகள் பின்பக்கம் கட்டப்பட்டு நிர்வாண நிலையில் சுடப்பட்டதாக அந்தக் காணொளியில் காண்பிக்கப் பட்டவர்கள் உண்மையில் அரச படையினைச் சேர்ந்தவர்கள் எனவும், சுட்டவர்கள் புலிகள் எனவும் இலங்கை அரசை களங்கப்படுத்தும் நோக்குடன் தமிழில் பேசப்பட்ட வார்த்தைகள் சிங்களமாக மாற்றப் பட்டு காணொளியில் புகுத்தப் பட்டிருப்பதாகவும் அந்தக் காட்சிகளின் அசல் தம்மிடம் இருப்பதாகவும் இலங்கை அரசுதரப்பு கூறுகிறது.

இதில் நாம் கருத்தில் கொள்ள வேண்டிய சில விடயங்கள் அந்தக் காணொளி பற்றிய வாதப்பிரதி வாதங்களில் அமுங்கிப் போய் விட்டன என நினைக்கிறேன். தமக்கு எதிரான இன அழிப்பு சிங்கள அர சால் மேற்கொள்ளப்பட்டது என்பதற்கு அது நல்ல சாட்சி என்று தமிழர் களால் உற்சாகமாகப் பேசப்படுகிறது. புலிகளை நிர்மூலமாக்கிய மகிந்த ராஜபக்ஷ, அவர் சகோதரர் கோத்தபாய ராஜபக்ஷ மற்றும் சில இராணுவ உயர் அதிகாரிகள் ஆகியோரை பழிக்குப்பழி வாங்கு வதற்கு நல்ல சாதனமாக அவர் களால் கருதப்படுகிறது. ஆனால் அந்தக் காணொளியில் உள்ளடக்கப் பட்ட பல புகைப்படங்களையும், ஒளி நாடாக்களையும் சனல்-4 க்கு கொடுத்தவர்கள் அந்த காணொளி தயாரிக்கப்படுவதற்கு ஆதாரங்கள் சமர்ப்பித்தவர்கள் சிங்களவர்களே. அதற்கு அவர்களுடைய உண்மை யான மனிதாபிமான உணர்வுகள் அல்லது மகிந்த அரசின் மீதான கோபமாக இருக்கலாம்.

மேலும் சில நாட்களுக்கு முன்னர், மறுபடியும் சனல்-4 மேலதிகமான பல படங்கள் கிடைத்திருப்பதாகவும் அவை மிகவும் குரூரமாக இருப்பதால் அவற்றை முழுதாக ஒளிபரப்ப முடியாதிருப்பதாகவும் தனது செய்தியில் தெரிவித்ததோடு சரணடைய முன்வந்த புலிகளை முடித்துவிடும்படி நேரடியாகக் கட்டளையிட்டது கோத்தபாய ராஜபக்ஷ என்றும் அதை நிறைவேற்றி யவர் பதவி உயர்வு பெற்று ஐ.நா சபையில் உதவி உயர் ஸ்தானிகராக இலங்கை அரசால் தற்பொழுது நியமிக்கப்பட்டிருக்கும் சவேந்திர சில்வா என்றும் சாட்சியம் அளிக்கக் கூடிய ஆனால் இப்பொழுது அடையாளப்படுத்த முடியாத போரின் இறுதி நாட்களில் இராணுவத்தில் கடமையாற்றிய இரு இராணுவ அதிகாரிகள் அதற்கு அளித்த பேட்டியையும் ஒளிபரப்பியிருந்தது. அதே ஒளிபரப்பில் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா தனது பேச்சொன் றில் துணிவுடன் அந்தக் காட்சிகளைப் பார்த்த தனது மகன் தான் சிங்கள இனத்தவரென்றோ, இலங்கையர் என்றோ சொல்ல வெட்கமாக இருக்கிறது என்று கூறியிருப்பதாக குறிப்பிட்டது.

இத்தனைக்கும் தமிழச் சமுதாயம் அந்தக் காணொளிக் காட்சிகளை ஏதோ தாமே வெளிக்கொண்டு வந்தது போன்ற பாணியில் பேசுகிறதேயன்றி அந்தக் காட்சிகளை போர்க்குற்றங் களுக்கான ஆதாரங்களாக வெளிக்கொண்டு வந்த சிங்கள இனத்தவர்களுக்கு எவ்வித பாராட்டும் தெரிவித்ததாக செய்திகள் எதுவும் நான் பார்க்கவில்லை. இதே தமிழ்ச் சமுதாயம்தான் ஜே.வி.பி யைச் சேர்ந்தவர்கள் என்ற குற்றச்சாட்டில் ஏறத்தாழ 60,000 சிங்கள இளைஞர் கள் இலங்கை அரச படையினரால் கொடூரமாக படுகொலை செய்யப்பட்ட போதும் பல உடல்கள் அநாதைப் பிணங்களாக களனி ஆற்றில் மிதந்தபோதும், ஜே.வி.பி யின் தலைவர் ரோஹண விஜேவீர நிராயுதபாணியாக படுகொலை செய்யப்பட்டபோதும் அக்கறையற்று வாளாவிருந்தது.

புலம் பெயர்ந்த தமிழச் சமுதாயம் சனல்-4 இல் காண்பிக்கப்பட்ட காட்சி களைப் பார்த்து ஒட்டுமொத்த சிங்கள இனத்தையுமே வெறுப்பாகச் சாடுகிறது. ராஜபக்ஷ சகோதரர்கள் நல்லா மாட்டப் போகிறார்கள் என்று உவகையும் கொள்கிறது. சிங்களவர் களோடு பேசித் தீர்க்க இனி என்ன இருக்கிறது என்று வெளிநாடுகளில் வசதியாக வாழ்ந்து கொண்டு வாய்ச்சவாடல் வேறு பேசுகிறது.

ஆனால் இந்த நிகழ்வுகளால் வெகு வாகப் பாதிக்கப்பட்டு இன்னமும் போதிய உணவு, உடை, வசிப்பிடம் இல்லாது அவல நிலைமையில் வாழ்ந்து கொண்டிருக்கும் பொது மக்களுக்கு என்ன உதவிகள் இது வரை செய்தீர்கள்? இப்பொழுது செய் கிறீர்கள் என்று அவர்களிடம் கேட்டால் அவர்களுக்கு கோபம் பொத்துக் கொண்டு வருகிறது. விதண்டாவாதம் பேசுகிறார்கள். அல்லது மெல்ல நழுவி விடுகிறார்கள்.

அ. மயில்வாகனம் கோப்பாய்

***கேள்வி:- வை.கோ என அழைக்கப் படும் தமிழக அரசியல்வாதி வை. கோபாலசாமி ஈழத் தமிழர்களின் நலனில் உண்மையிலேயே அக்கறை கொண்டவரல்லவா?***

**பதில்:-** சமீபத்தில் வை.கோ ஒரு நேர்க்காணலில் கூறியிருந்தது:- " நாங் கள் தி.மு.க, அ.தி.மு.க ஆகிய கட்சி களுடன் கூட்டணி சேர்ந்திருந்தோம். எனினும் நாம் அழித்து ஒழிக்கப் படக்கூடிய நிலை வரும் போது தற் காலிகமாக சமரசம் செய்து கொள்வதில் தவறில்லை என பகத்சிங் கூறியிருக்கிறார். எங்களுக்கும் அத் தகைய சூழ்நிலை வந்தபோதுதான் தற்காலிகமாக சமரசம் செய்து கொள்ள கூட்டணி வைத்தோம்.

ஆனால் இதே வை.கோ பிரபாகரன் எது வரினும் தனது நிலைப்பாட்டை மாற்றிக் கொள்ளாத தன்மானத் தமிழன் பிரபாகரனின் வழிநடத்தலில் புலிகள் ஈழத் தமிழர்களுக்கு தனிநாடு பெற்றுக்கொடுப்பார் என்று. வடிவேலு பாணியில் சொல்லுவதானால் உசுப்பேற்றியே இரத்தக்களரி ஆக்கியவரல்லவா.

இவரை எப்படி ஈழத்தமிழர்களின் நலனில் உண்மையான அக்கறை கொண்டவரென்று கூற முடியும்?

படிப்பகம்

www.padippakam.com



## அரசுடனான பேச்சுவார்த்தை...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இந்த பேச்சுவார்த்தை நாடகம் பற்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் காலங்கடந்தாயினும் திட்டவட்டமான ஒரு நிலைப்பாட்டை முன்வைத்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

அறுபத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக நிலவும் பிரச்சினைகளுக்கு தீர்வுகாண எத்தனையோ விதமான பரிந்துரைகள் வெவ்வேறு காலகட்டங்களில் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன. எந்தக் காலகட்டத்திலும் அப்பரிந்துரைகளை மானசீகமாக ஏற்று செயற்படுத்துவதற்கு பௌத்த சிங்கள மேலாண்மை சக்திகளுக்கு விருப்பம் இருக்கவில்லை. ஒரு பெரும் அழிவை இந்தநாட்டுக்கு ஏற்படுத்திய யுத்தம் முடிவடைந்து இரண்டு ஆண்டுகள் ஆகிவிட்டன. இப்போது அதிகாரத்தில் இருக்கும் மஹிந்த அரசாங்கம் இனியாவது நாட்டில் சமாதானத்தை நிரந்தரமாக ஏற்படுத்துவதற்கு அவசியமான அரசியற் தீர்வைக் காண்பதில் மானசீகமாக அக்கறை காட்ட வேண்டும்.

அதேவேளை காலத்தின் பின்னணியில் மக்களின் அரசியல் பொருளாதார நலன்களையும் நாட்டின் அகப்புறச் சூழ்நிலைமைகளையும் கணக்கிற் கொண்டு நடைமுறையில் செயற்படும் தன்மை வாய்ந்த ஒரு நியாயமானதோர் அரசியற் தீர்வைக் காண்பதற்கு வேண்டிய அணுகுமுறைகளை தமிழர்களின் தலைமைகள் கடைப்பிடிக்க வேண்டும். கடந்த காலங்களில் சிங்களத் தலைவர்களுக்கும் தமிழ்த் தலைவர்களுக்கும் இடையில் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின் போது அடையப்பட்ட பிரேரணைகளில் ஒன்றையாவது அடிப்படையாகக் கொண்ட வகையாகவே இங்கு பேச்சுவார்த்தை நடைபெற்றிருக்க வேண்டும் ஆனால் பேச்சுவார்த்தையில் ஈடுபட்ட எந்தப் பகுதியினரும் அவ்வாறான கருத்துத் தெளிவுடன் செயற்பட்டதாகத் தெரியவில்லை. கடைசியாக பேச்சுவார்த்தை அர்த்தமற்றுப் போனதற்கு எந்தவிதமான அடிப்படைகளுமற்ற வகையில் சுற்றிச் சுற்றி சந்திப்புகள் மட்டும் நடந்ததே காரணமெனலாம்.

தமிழ் தரப்பில் ஆதிக்கம் செலுத்தி வந்தவர்கள் கடந்த காலங்களில் அவ்வப்போது கிடைத்த சந்தர்ப்பங்களை நழுவவிட்டு வந்திருக்கின்றனர் இந்திய அனுசரணையுடன் 1980 களின் நடுப்பகுதியில் உருவாகிய தீர்வுத்திட்டம், சந்திரிகா அவர்களால் 1990 களின் நடுப்பகுதியில் முன்வைக்கப்பட்ட யோசனை ஒஸ்லோவில் சர்வதேச சமூகத்தின் அனுசரணையுடன் கொண்டுவரப்பட்ட சமஷ்டி யோசனை என்பனவெல்லாம் கைதவற விடப்பட்ட விடயங்களாகி விட்டன.

இப்போதைய பேச்சுவார்த்தையின் போது உண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பு எத்தகைய விடயங்களை முன்வைத்து பேச்சுவார்த்தையை ஆரம்பித்தது? எவ்வாறு அந்த விடயங்களைத் தொடர்ந்தது? அவற்றிற்குப் பதிலாக அரசு என்ன கூறியது? எந்தளவிற்கு அதிகாரப் பகிர்விற்கு அரசாங்கம் தயாராக இருந்தது? அல்லது தயாராக இருக்கவில்லை? என்ற கேள்விகளுக் கான விடைகளை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு மக்களுக்கு இனியாவது பகிரங்கப்படுத்த வேண்டும்.

சிங்கள மக்கள் மத்தியில் உள்ள அதிகாரப்பகிர்வை வலியுறுத்தும் சக்திகளுடன் தமிழ் மக்களின் அனைத்து தரப்பினரும் கூட்டாக இணைந்து ஒரு அதிகாரப்பகிர்வு இயக்கத்தை நடாத்த முன்வர வேண்டும்.

ஏமாற்றுவது, ஏமாறுவது என்ற பாரம்பரியம் இனிமேலும் தொடர முடியாது.

அதிகாரப்பகிர்வை மேற்கொள்வதற்குத் தடையாக புலிகளை ஒரு காரணியாக அரசு தரப்பினர் கடந்த காலங்களில் காரணம் காட்டி வந்தனர். இப்போது அரசியற் தீர்வுக்கு புலிகள் என்ற காரணி தடையாக இல்லை. அந்தப் புலிகள் அழிக்கப்பட்டு விட்டனர்.

அதேபோல, சிங்கள மக்களிடமிருந்து எதிர்ப்பு இருக்கிறது. சிங்களக் கட்சிகள் எதிர்க்கின்றன என்றும் கூற முடியாது. அதிகாரப் பகிர்வுக்கு எதிரான சிங்கள இனவாத சக்திகளுக்கு சிங்கள மக்கள் மத்தியில் எந்தவித செல்வாக்கும் இல்லை. ஏனெனில் இப்போதைய அரசுக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை பாராளுமன்றத்தில் காணப்படுகின்றது. இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கான போதிய அரசியற் பலமும் வாய்ப்புகளும் இன்றைய இலங்கை அரசாங்கத்திடம் உள்ளன.

இப்போது அறிவிக்கப்பட்டுள்ளபடி "பாராளுமன்ற தெரிவுக்குழு மூலமே அரசியற் தீர்வு" என்பது மேலும் சில ஆண்டு காலத்தை இழுத்தடிப்பதற்கான நாடகமே என ஐயப்பட வேண்டியுள்ளது.

எனவே மக்களுக்கு எதுவும் தெரியாத வகையில் மூடுமந்திரமாக இடம்பெற்று வந்த பேச்சுவார்த்தைக்கு முடிவுகட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பு முடிவு செய்திருப்பது வரவேற்கத் தக்கது.

## பிரதேச செயலகங்களையும்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

2005ம் ஆண்டு கிரான் பிரதேச செயலக பிரிவிற்கு (கோறளைப்பற்று தெற்கு) தனியான பிரதேசசபை உருவாக்குவதற்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சு பிரதேச செயலாளர் தலைமையில் குழு நியமிக்கப்பட்டும் இன்று வரையும் அது உருவாக்கப்படவில்லை.

30 வருடங்களுக்கு மேலாக தமிழ் பிரதேசங்களில் இயங்கிய மத்திய அரசு மற்றும் மாகாண சபைகளினது நிர்வாகங்கள் அபிவிருத்தி மற்றும் உள்ளூராட்சி போன்ற செயற்பாடுகளில் அக்கறை இல்லாதவர்களாகவும் (அக்கறை இருந்தாலும் கூட) தமிழ் மக்களுக்கு அவசியமானதாக உணரப்பட்ட புதிய பிரதேச செயலகங்களையும், உள்ளூராட்சி சபைகளையும் உருவாக்கக்கூடிய அரசியல் பலம் அற்றவர்களாகவும் தமிழ் அரசியல் தலைவர்கள் இருந்து வருகின்றனர்.

இந் நிலைமைகளை மத்திய அரசும் அதன் அடிவருடிகளும் சாதகமாகப் பயன்படுத்தி தமிழர்களின் பாரம்பரிய பிரதேசங்களை சூழ்ச்சியான முறையில் அபகரித்து வருகின்றனர்.

தமிழர்களின் புனிதத் தலங்களை அழிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படுகின்றன. (முன்னாள் எம்.பி சம்சுதீன் அவர்களின் வீட்டிற்கு அருகில்) இருந்த பறையர் கோயில் என்று அழைக்கப்படும் இந்துக்களின் வழிபாட்டுத்தலம், கல்முனைகுடி சாய்ந்தமருது சாஹிரா கல்லூரிக்கு போகும் சந்தியில் இருந்த பெரிய பிள்ளையார் கோயில், மீனோடை கட்டுக்கோயில், ஓட்டமாவடி பொதுச்சந்தை உள்ள இடத்தில் இருந்த பிள்ளையார் கோவில் என்பன இருந்த இடமும் இல்லாமல் ஆக்கப்பட்டுள்ளன.

### தமிழர்களின் தொடர்ச்சியான நிலப் பிரதேசங்கள் பறிக்கப்பட்டுள்ளன

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள ஓட்டமாவடி பாலத்திலிருந்து கொழும்பு நோக்கி செல்லும் வீதியில் இருமருங்கிலும் இருந்த தியாவெட்டுவான், மைலங்கரைச்சி, நாவலடிச்சந்தி ஆகிய தொடர்ச்சியான பாரம்பரிய தமிழ் கிராமங்கள் கபளீகரம் செய்யப்பட்டுள்ளன.

அம்பாறை மாவட்டத்தில் மீனோடைகட்டு மடத்தடி ஒலுவில் அட்டப்பள்ளம் திராய்மடு ஆகிய தமிழர்கள் இருந்த கிராமங்களில் குறிப்பிடத்தக்களவு நிலப்பிரதேசங்கள் இல்லாமல் போகும் நிலை ஏற்பட்டுள்ளது.

ஒரு சமூகத்திற்கு காணி இல்லாத பட்சத்தில் அதை மத்திய அரசிடம் இருந்து பெற்றுக்கொள்வதே முறையும் அவர்களின் உரிமையுமாகும். அதைவிடுத்து இன்னோர் இனத்தின் பாரம்பரிய வாழ்விடங்களை அபகரிப்பது அடாத்தான செயலாகும்.

ஆகவே தமிழர் அல்லாத பகுதிகளுக்கு அதிகமான அரச வளங்களை தமது அரசியல் வாய்ப்புக்களையும், செல்வாக்கையும் பயன்படுத்தி இனங்களை பாதிக்கும் வகையில் செயல்படுவதைத் தடுப்பதற்கு பிரதேச நிர்வாகங்களை அதிகாரம் உள்ளவையாக மாற்ற வேண்டும். ஏனைய இனங்கள் பாதிக்கப்படாத வகையில் நிர்வகிக்கப்பட வேண்டும் அதற்கு புதிய பிரதேச செயலகங்களையும், உள்ளூராட்சி சபைகளையும் உருவாக்குவதற்கு அரசுடன் சேர்ந்த மாகாண முதலமைச்சர் தொடக்கம் மத்திய பிரதி அமைச்சர்கள் வரை எதிர்கட்சி, ஆளும் கட்சி என்ற பேதமில்லாமல் விரைவாக நடவடிக்கை எடுக்க முன்வருதல் வேண்டும்.

இதேவேளை அரசுடன் சேர்ந்த தமிழ் அமைச்சர்கள் அபிவிருத்தியோடு எமது உரிமையையும் கருத்திற்கொண்டு செயல்பட வேண்டும் எனவும் திரு இரா. துரைரெட்ணம் தெரிவித்துள்ளார்.

## இடதுசாரி தலைவர்கள்...

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்கொள்ளப்படுகின்ற கலந்துரையா டல்கள் புதிய பிரேரணைகள் புதிய கருத்துக்கள் திரட்டல் என்பவையாக அல்லாமல் ஏற்கனவே பல்வேறு கட்சிகளுக் கிடையிலும் நடைபெற்ற பேச்சு வார்த்தைகளின் ஊடாக அடையப்பட்ட ஒரு தீர்வுத் திட்ட பிரேரணையை அடிப்படையாகக் கொண்டே செயற்பட வேண்டும் என்ற பொதுக்கருத்தே இக்கூட்டத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலில் நிலவியது.

இன்றைய சந்திப்பின்போது பின்வரும் சில விடயங்களும் பிரதான மானவை யாக கருத்தில் கொள்ளப்பட்டன.

1. சர்வதேச சமூகங்களின் மத்தியில் இலங்கை அரசாங்கம் தொடர்பாக தொடர்ச்சியாக அதிகரித்துவரும் அழுத்தங்கள் இலங்கை அரசுக்கு ஒரு பெரும் அரசியல் ராஜதந்திர நெருக்கடியை ஏற்படுத்தவுள்ளன,

2. இந்திய இலங்கை உறவில் ஏற்பட்டு வரும் எதிரும் புதிருமான மாற்றங்கள் இந்தியாவின் அழுத்தங் களை இலங்கை அரசு குறித்து விரிவடைந்து வரும் ஒரு விடயமாக உள்ளது. இந்தியா என்னும் அரசியல் காரணி இலங்கையின் அரசியலில் பெரும் மாற்றங்களை ஏற்படுத்தக் கூடியது.

3. கடந்த உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகள் இலங்கையின் இனங்களுக்கிடையிலான உறவு நிலையில் ஓர் எதிர் நிலையான துருவப் போக்கு அதிகரித்திருப் பதையே காட்டுகிறது. அந்த ஆபத்திலிருந்து மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு அவசியமான ஒரு முற்போக்கான இணக்க சக்திகளின் மையம் இங்கு செயற்படவேண்டியது மிகவும் அவசியம். இங்கு பங்கு பற்றிய கட்சிகள் அதற்கான பங்குகளை ஆற்றுவது அவசியமாகும்.

4. இலங்கையின் இனப் பிரச்சனைத் தீர்வுக்கு நியாயமான அளவில் அதிகாரப் பகிர்வு கொண்ட மாகாண சபைகளின் செயற்பாடு அவசியமாகும். அரசாங்கத்திலும் மற்றும் எதிர்க்கட்சிகளின் மத்தியிலும் அதிகாரப் பகிர்வுக்கு சாதகமாக உள்ளவர்கள் பலர் உள்ளனர். இவர்களை ஓர்அணி திரட்ட வேண்டும் என்பதும் அத்தோடு அதிகாரப் பகிர்வு தொடர்பாக சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் காத்திரமான பிரச்சாரங் களை முற்போக்கு சக்திகள் மேற்கொள்ள வேண்டும்.

மேலும் இங்கு பங்கு பற்றிய மூன்று இடதுசாரிக் கட்சிகளின் தலைவர் களும் இன்றைய அரசாங்கத்தில் அமைச்சர்களாக இருந்த போதிலும் அவர்கள் சுயாதீனமான முறையிலும் தத்தமது கட்சிகளின் சுதந்திரமான அரசியல் நிலைப்பாடுகளின் அடிப்படையிலும் மக்கள் மத்தியில் தமது அரசியல் மற்றும் ஸ்தாபன வேலைப்பாடுகளை மக்களுக்கு வெளிப்படுத்துவதோடு சிங்கள தமிழ் மக்கள் மத்தியில் உள்ள இடதுசாரி மற்றும் முற்போக்கு சக்திகளை ஒருங்கிணைத்து ஒரு முற்போக்கு ஜனநாயக அரசியலை முன்னெடுப் பதற்கான வேலைத்திட்டங்களை மேற்கொள்வது பற்றியும் இங்கு கலந்துரையாடப்பட்டது. அத்துடன் இன்றைய கூட்டத்தைப்போல தொடர்ந்தும் மாதாந்தம் கூட்டங்களை தொடர்வது எனவும் முடிவு செய்யப்பட்டது.

படிப்பகம்

www.padippakam.com



## தமிழ் தலைவர்கள் புதுடெல்லிக்கு அழைப்பு



தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர்களான திரு. மாவை சேனாதிராஜா மற்றும் சுமந்திரன் அவர்களும் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியின் தலைவர் திரு. வீ.ஆனந்தசங்கரி அவர்களும், பத்மநாபா ஈழ மக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர்களான திரு இரா. துரைரெட்ணம் மற்றும் திரு. தி.சிறீதரன் ஆகியோரும் தமிழீழ மக்கள் விடுதலை கழகத்தின் தலைவர் திரு. த. சித்தார்த்தன் அவர்களும் அழைக்கப்பட்டுள்ளனர்.

மீள் குடியேற்றப் பிரச்சினைகள், மற்றும் அரசியல் ரீதியான முக்கியத்துவம் வாய்ந்த இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக கலந்துரையாட உள்ளனர்.

இந்த நிகழ்ச்சியின் பொழுது புலிகளுக்கும் இலங்கை அரச படைகளுக்கு மிடையில் நடந்த இறுதி யுத்தத்தின் போது இடம்பெற்ற மனித உரிமைகள் மீறல்கள் தொடர்பாகவும் மேலும் அதற்குப் பின்னர் வடக்கு கிழக்கில் இடம்பெற்றுவரும் மனித உரிமை மீறல்கள், அடிப்படை உரிமை மீறல்கள் ஆகியன தொடர்பாகவும் கூட்டான தீர்மானங்களை மேற்கொள்ளவுள்ள தாகவும் தெரிகின்றது.






இந்த அழைப்பினை இந்திய தேசிய காங்கிரஸின் தமிழகத் தலைவர்களில் ஒருவரான பாராளுமன்ற உறுப்பினர் திரு. சுதர்சன நாச்சியப்பன் அவர்கள் விடுத்துள்ளார். புது டெல்லி செல்லும் தமிழ் தலைவர்கள் இந்திய பாராளுமன்றத்தில் உள்ள தமிழக நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் இலங்கையின் மனித உரிமை பிரச்சினைகள், அகதிகளான மக்களின் துமிழகத்தில் ஏற்பட்ட அரசியல் மாற்றத்தின் பின்னர் தமிழக அரசியல் தலைவர்கள் இலங்கையின் இனப்பிரச்சினை தொடர்பாக மிகவும் சூடான நிலைப்பாடுகளை கொண்டிருப்பதைத் தொடர்ந்து புதுடெல்லியில் நடை பெறவுள்ள இந்தச் சந்திப்பானது இலங்கை இந்திய அரசியல் உறவில் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக அமையக்கூடுமென எதிர்பார்க்கப் படுகிறது. ●

## வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கு சுயாட்சி வழங்க வேண்டும் – இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்) கட்சி கோரிக்கை

இலங்கையில் தமிழ்ப் பேசும் மக்களைப் பெரும்பான்மையாகக் கொண்ட வடக்கு கிழக்கு மாகாணங் களுக்கு சுயாட்சி அதிகாரங் களுடனான அரசியற் தீர்வை வழங்க வேண்டும் என்றும் அதற்கு வேண்டிய நடவடிக்கைகளை இலங்கை அரசு மேற்கொள்ள வேண்டும் என இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி அதனது மத்தியகுழு கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றியுள்ளது. இதற்கான அழுத்தங்களை இலங்கை அரசு மீது இந்தியா மேற்கொள்ள வேண்டுமென இந்திய அரசாங்கத் தையும் அத் தீர்மானத்தில் கேட்டுக்கொண்டுள்ளது.

இந்திய மாக்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எந்தவொரு காலகட்டத்திலும் இலங்கையில் பிரிவினையை ஆதரிக்க வில்லை எனினும் இலங்கைத் தமிழர் களின் மாகாணங்களுக்கு சுயாட்சி அளவுக்கு அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டுமென தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றது.

இந்திய மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி எந்தக் கட்டத்திலும் புலிகளை ஆதரிக்கவில்லை என்பது மட்டுமல்ல அது புலிகளின் பாசிச பயங்கர வாதத்தை எப்போதும் எதிர்த்தே வந்துள்ளது.

இக் கட்சியானது இந்தியா முழுவதும் விவசாயிகள், தொழிலாளர்கள் மற்றும் இளைஞர்கள் மத்தியில் பரந்துபட்ட அமைப்பினைக் கொண்ட கட்சியாகும். இக் கட்சி இந்தியாவிலுள்ள ஏனைய அரசியற் சக்திகளைப் போல நேரத்திற்கு ஒரு நிலைப்பாடு என இல்லாமல் எந்தவொரு விடயத்திலும் யதார்த்த நிலைமைகளை புரிந்து கொண்டும் கொள்கை மற்றும் சித்தாந்த வழி நின்றே தமது தீர்மானங்களையும் நடைமுறைகளையும் மேற்கொள்ளும்.

இக் கட்சியின் மத்தியகுழு தீர்மானம் என்பது இக் கட்சியில் பல இலட்சக் கணக்கான தீர்மானம் என்ற வகையான வலுவுடையதாகும்.

இக் கட்சி மேற்கு வங்காளத்தில் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு மேலாக ஆட்சியில் இருந்தது. அதே போல் திரிபுரா மாநிலத்திலும் நீண்ட காலம் ஆட்சி செய்தது. கேரளாவில் இக் கட்சியும் காங்கிரஸ்மே மாறி மாறி ஆட்சிக்கு வருவன. இப்போது தமிழகத்தில் ஆட்சியிலிருக்கும் ஜெயலலிதா அவர்களுடனும் இவர் கள் கூட்டணியில் உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## நோர்வே உதேயா தீவுப் படுகொலைகள்

நோர்வேயின் தலைநகர் ஒஸ்லோவிலும் உதேயோ தீவிலும் நடத்தப்பட்ட பயங்கரவாத தாக்குதல் களில் 77 பேர் கொல்லப் பட்டது மீண்டும் மேற் குலகையே அதிர்ச்சியில் உறையவைத்துள்ளது.

பாசறையில் பயிற்சியில் ஈடுபட்ட அப்பாவி இளைஞர், யுவதிகள் மீது காட்டியிருப்பது தெரியவந்துள்ளது.

இந்த குரூரத்தனத்தில் சிலுவையுத் தகனவுகளின் கூறுகள் இருக்கவே செய்கின்றன.



மதம் சார்ந்த போதை உணர்வுகள் இன்று உகளாவிய அளவில் பல லட்சக்கணக்கான மக்களை காவு கொண்டிருக்கின்றன.

இதனை கலாச்சாரங்களிடையேயான மோதல் என நாகரிக வார்த்தைகளில் குறித்து விடமுடியாது.

மனித குலத்தில் ஒரு பிரிவினருக் கெதிராக இன்னொருபிரிவினர் நம்பிக்கைகள் எனும் போதை யூட்டலி னூடாக வெறுப்பூட்டும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் களைய வேண்டியுள்ளது.

ஜனநாயகமும், மனித உரிமைகளும் பேணப்படு வதுடன் மிக உயர்தர மான பொருளாதார வாழ்க்கையையும் கொண்ட நோர்வேயில் ஒற்றை மனிதனால் நடத்தப்பட்ட இந்த தாக்குதல் பல கேள்விகளை எழுப்புகின்றன.

எம்மைப் போன்ற தெற்காசியர் களுக்கும் மத்திய கிழக்கு மேற்காசி யர்களுக்கும் இவ்வாறான சம்பவங்கள் மிகவும் பரிச்சயமானவையே.

2001 செப்டெம்பர் 11ம் திகதி அமெரிக்க இரட்டைக் கோபுரங்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல்கள் அமெரிக்க எதிர்ப்பு இஸ்லாமிய அடிப்படைவாதம் சார்ந்தவை.

ஆனால் இப்போது நோர்வேயில் நடந்திருப்பது வேறு சங்கதியைக் கொண்டதாக உள்ளது

இது நாஜிகளின் புத்துயிர்ப்பை காட்டுவதாக உள்ளது. அந்த நாசிசம்

அறுபது லட்சம் யூத மக்களின் படு கொலை உட்பட மனித குல விரோத செயற்பாடுகள் எல்லாவற்றையும் ஏற்றுக்கொண்டது.

இதில் சம்பந்தப்பட்ட அன்ரஸ் பேர்விங் பிரிவிக் இஸ்லாமிய விரோத கருத்து களை பரப்பிக் கொண்டிருந்த ஒரு ஆள்.

இந்த நபர் தனது வெறுப்புணர்வை தொழிலாளர் கட்சியின் பயிற்சிப்

வறுமை பொருளாதார சமத்து வமின்மை என்பன இந்த வன்முறை களில் கணிசமான செல்வாக்குச் செலுத்து கின்றன என்றாலும்

நோர்வே போன்ற வளங்கொழிக்கும் நாடுகளிலும் இச்சம்பவங்கள் நடக்கின் றனவென்றால் அதுபற்றி இன்றைய நாகரிக உலகம் ஆழமாகச் சிந்திக்க வேண்டிய கட்டாய மேற்பட்டுள்ளது.

சாதாரண மக்களுக்கெதிரான மத மொழி உணர்வுகளால் போதையேற் றப்பட்ட குழுப் பயங்கரவாதமானாலும் சரி ,அரசபயங்கர வாதமானாலும் சரி இவை தொடர்பில் தயவு தாட்சணியம் இருக்க கூடாது.

உலக பயங்கரவாதத்துக்கு எதிரான போர் என்ற பெயரில் சர்வதேச ரீதியில் இஸ்லாமிய மக்களுக்கு எதிரான உணர்வை மேற்குலகம் வளர்த்து வருவதுவும் இங்கு கவனத்திற் கொள்ளப்பட வேண்டும்.

மானிடநேயம் மானிட இருப்பு என்ப வற்றை உறுதிப்படுத்த அண்ணல் காந்தி மாட்டின் லூதர் கிங், நெல்சன் மண்டெலா போன்றோர் காட்டிய வழியில் உலகளாவிய இயக்கம் ஒன்று இன்றைய வரலாற்றின் அவசியமாகி உள்ளது. ●

## உள்ளூராட்சி தேர்தல் முடிவடைந்தது வட மாகாணசபைத் தேர்தல் அடுத்தது

இரண்டாம் கட்ட உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் முன்னர், 2012ம் ஆண்டு முற்பகுதி மாதங்களில் வட மாகாண சபைக்கான தேர்தல் நடைபெறும் என அரசியல் ஆருடங்கள் கூறின. உள்ளூ ராட்சித் தேர்தல் முடிவடைந்த பின்னரும் சில அமைச்சர்களும் அவ்வாறே கூறுகின்றனர்.

ஆனால் அரசின் பிரதான தரப்பினரிட மிருந்து அது எதுவும் வெளிவர வில்லை. ஜனாதிபதி எதுவும் கூறவி ல்லை. தானே முதலமைச்சர் என்று பேட்டியளித்து வந்த டக்ளஸ் தேவானந்தா உள்ளூராட்சித் தேர்தல் முடிவுகளின் பின்னர் மௌனமாகி விட்டார். தான் முதலமைச்சராவது சாத்தியமில்லை என்பதால் வட மாகாணசபை மீது அவருக்கு அக்கறை இல்லாமற் போயுள்ளது தெரிகிறது.

கிழக்கு மாகாணசபையை கட்டுப் பாட்டில் வைத்திருப்பது போல் வட மாகாணசபையை வைத்திருக்க முடியாது என்பது ஜனாதிபதிக்கும் அமைச்சர்களுக்கும் நன்கு தெரியும். அதிகாரங்கள் இல்லாவிட்டாலும் வடமாகாணசபை அரங்கம் அதிகாரப் பகிர்வுக்கான நிகழ்ச்சி நிரலின் சட்டபூர்வமான அரங்கமாகிவிடும் என அரசு கவலைகொள்ள இடமுண்டு.

தமிழ் தேசிய கூட்டமைப்பைச் சேர்ந்த பலர் இப்பொழுதே எதிர்கால வடக்கு மாகாணசபை முதலமைச்சர் என்ற கனவோடு இருப்பது தெரிகிறது.

இருப்பினும், அதிகாரமில்லாத மாகாணசபையின் ஆட்சியில் உட்கார் ந்தால் மக்களின் பொறுப்புக்களை, மாகாண நிர்வாகத்தை, மாகாண அபிவிருத்தியை, மாகாணத்தின் வேலைவாய்ப்புக் கோரிக்கைகளை எதிர்நோக்க வேண்டும். எதிர்கட்சி அரசியல் மட்டுமே நடத்திப் பழக்கப் பட்ட தமிழ் தேசிய கூட்டமைப்பின ருக்கு இவ்வாறான மக்கள் பொறுப்புக்களை ஏற்பதென்பது சிலுவை சுமக்கும் வேலையாகும்.

மேலும் மாகாண சபைத்தேர்தல் வந்தால் இப்போது நீருக்குள் நெருப்பாக குமைந்து புகைந்துக் கொண்டிருக்கும் தமிழ் தேசிய கூட்டமைப்பின் உட்பூசல் பாராளு மன்ற மட்டத்தில் அவர்களிடையே பிளவாக வெளிப்படவும் வாய்ப்புண்டு.

அத்துடன் மாகாணசபையின் முதலமைச்சர், அமைச்சர்கள் எனும்போது சில சம்பிரதாயங்கள் மற்றும் ஜனநாயக ஆட்சியாளர் களுக்கான, மரபுகளைக் கடைப்பிடிக்க வேண்டிய கட்டாயமேற்படும். அவை வீராவேச வசன அரசியலுக்கு எதிர்மாறானவையாகும்.

வடக்கு மாகாணசபையானது மக்களின் பிரதிநிதிகளைக் கொண்ட தாக செயற்பட ஆரம்பிப்பது தமிழ் மக்களின் பொது வாழ்வுக்கும் அரசியல் நலன்களுக்கும் அவசிய மானதொன்று என்பதில் சந்தேக மில்லை.

ஆனாலும் யார் இந்த பூனைக்கு மணிகட்டுவார் என்பதே கேள்வியாகும்.

தி. சிறிதரன் 29ஏ, வாவிக்கரை வீதி, மட்டக்களப்பு அவர்களால் இல 119, பல்கலைக்கழக வீதி, இரத்தினப்பிட்டிய, பொரலஸ்கமுவ சி.ஆர்.சி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது.

படிப்பகம்